THE "VAKIL" TAMIL LAW MONTHLY FOR THE

119

# "வக்கீல்"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
APR 1950
MADRAS

119

போது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

## தமிழ் மாதப் பத்திரிகை

ஏப்ரல் 1950

### இந்த இதழில்

இவ்வருடத்திய
புது சட்டங்கள்

ஜீவாதார உரிமைகள்
எவை ?

குற்றம் செய்வதற்குமுன்பே
காவலில் வைக்க சட்டம்

வழக்கும் - தீர்ப்பும்

"மாமூல்" "மரியாதை"
எல்லாம் "லஞ்சம்"தான்

கேள்வி - பதில்

வருமானவரிச் சட்டம்

பரிவர்த்தனை பத்திரம்

கண்ட்ரோல் உத்திரவுகள்

சர்க்கார் அறிக்கைகள்



தபால் பெட்டி நெ. 26. கும்பகோணம்.

தனிப்பிரதி அணா 4
வருட சந்தா ரூ 3

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.




(பிராஞ்சு : மன்னார்குடி )

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

**சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத்தைலம்,**
**கோகுல் கூந்தல் தைலம்**

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

For Madras
**Suraj Agencies,**
Madras.

For Coimbatore, Palghat & Nilgiris
**B. Balapattabi Chettiar,**
246, Vysyal St., Coimbatore.

## முக்கிய அறிவிப்பு

1949 மே மாதம் முதல் "வக்கீல்" வருட சந்தாதாரராகச் சேர்ந்த நேயர்களுக்கு இந்த இதழுடன் 12 இதழ்கள் அனுப்பப்பட்டு விட்டபடியால், தயவு செய்து அடுத்த 12 இதழ்களுக்குள்ள சந்தாத் தொகை ரூ. 3-யும் மணியார்டர் மூலம் "மானேஜர், வக்கீல் காரியாலயம், தபால் பெட்டி 26, கும்பகோணம்" என்ற விலாசத்திற்கு அனுப்பவும். தனித்தனித் தபால் எழுதுவது சாத்தியமல்ல; மன்னிக்கவும்.


"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு.

ஆசிரியர் கமிட்டி



ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜபத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A. B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L.


### "வக்கீல்"
### (சந்தா விபரம்)

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ... ... ரூ. | 3—0—0 |
| தனிப் பிரதி (வெளிவரும் மாதத்தில்) | ... | 0—4—0 |
| முந்திய மாதப் பிரதி | ... | 0—6—0 |
| வெளிநாடு வருட சந்தா | ... | 6—0—0 |

"வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம்


### "வக்கீல்"
### விளம்பர விகிதம்

ஒருமுறை பிரசுரம் செய்ய

| | |
|---|---|
| பின் அட்டை முழுப்பக்கம் (இரண்டு கலர்) | ரூ. 100 |
| உள் அட்டை முழுப்பக்கம் | ரூ. 80 |
| உள் பக்கம் முழுப்பக்கம் | ரூ. 60 |
| ஷை ... அரை பக்கம் | ரூ. 35 |
| ஷை ... கால் பக்கம் | ரூ. 20 |
| ஒரு காலம் – அங்குலம் | ரூ. 5 |

(தொடர்ச்சியாய் 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)


# "வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை


மலர் 2 ஏப்ரல் 1950 இதழ் 4


## பொருள் அடக்கம்


குறிப்புகள்
- புதிய சட்டங்கள் 3
- பாக பத்திர ஸ்டாம்பு 3
- கேள்விகளுக்கு நேரில் பதில் கிடைக்க 3

புதிய சட்டங்கள்
- சுருக்கியும் - வரிசையாயும் 4

புதிய சட்டங்கள்
- பொறுக்கியும் - விபரமாயும் ஜீவாதார உரிமைகள் 5
- குற்றம் செய்யு முன்பே காவலில் வைக்க சட்டம் 9

வழக்கும் - தீர்ப்பும்
- 'மாமூல்' 'மரியாதை' எல்லாம் 'லஞ்சம்' தான் 10
- பஞ்சாயத்தார்கள் முன் தூஷணை 12
- குற்றம் செய்தவர் சட்டப் பிரச்னையால் தப்பினர் 14

கேள்வி - பதில் 15

பத்திரங்கள்
- பரிவர்த்தனை 19

வருமான வரி 21

கன்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்
- விலை நிர்ணயம் - இதர சர்க்கார் அறிக்கைகள் 22

## ஆச்சரியகரமான தேள்கொட்டு நிவாரணி

கொட்டுவாய் தெரியவேண்டியதில்லை

மருந்தில் இரண்டு சொட்டுகள் காதில் விட 5 நிமிஷத்திற்குள் முழு வலியும் நீங்கும்.

½ அவுன்ஸ் பாட்டில் அணா 8 (தபால் செலவு தனி)

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் உண்டு

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட், கும்பகோணம்.

## சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்

P. B. No. 38

தஞ்சாவூர்

தயாரிப்புகள் :—

அப்ஜா—ஆனந்தா—கதம்பா

ரஞ்சிதா—நீரடிமுத்து

நறுமணங்கமழும் ஸ்நான சோப்புகள் யாவராலும் போற்றப்படுபவை.

மொத்த வியாபாரிகள் மட்டுமே தேவைக்கு எழுதவும்.

## தி நியூ மாடர்ன் ஹோட்டல்

போர்டிங் & லாட்ஜிங்

நெ. 10 மேலப்புலவார்டு ரோட்

தெப்பக்குளம், :: திருச்சிராப்பள்ளி.

சகல வசதியும் நவீன சுகாதாரத்திற்கு ஏற்றதாகவும் உள்ள இடம். அன்பர்கள் யாவரும் விஜயம் செய்ய வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

Proprietor: K. R. அப்புசாமி அய்யர்.

"வக்கீல்" பத்திரிகை

டிராவலிங் இன்ஸ்பெக்டர் தண்டாங்கோரை திரு. S. வெங்கடராமன் அவர்களுக்கு எல்லா இடங்களிலும் "வக்கீல்" பத்திரிகைக்கு சந்தாதார்கள் சேர்க்கவும், விளம்பரம் சேர்க்கவும், ஏஜண்டு அப்ளிகேஷன் பெற்றுக்கொண்டு ஆபீசுக்கு அனுப்பவும் அதிகாரம் உண்டு.

பெட்ரூம் லேட்டுத் திரி, பட்டுக் கயிறு, பின்னல்கயிறு, தாலிக்கயிறு, இடுப்புக்கயிறு முதலியவைகளுக்கு எழுதவும்.

சாம்பிள் இனாம்.

ஸ்ரீ ஜானகி & Co.,

39/A பால்மால் குறுக்குத்தெரு, மதுரை.

## தென் இந்திய ரெயில்வே டெலிவரி & புக்கிங் ஸர்வீஸ்

உங்களுக்கு ரயிலில் வரும் சாமான்களை உங்களிடத்தில் பொறுப்புடன் சேர்க்கவும், உங்கள் சாமான்களை புக்கிங் செய்து ரசீதை உங்களிடம் கொண்டு சேர்க்கவும் அடியிற்கண்ட இடத்தில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

**D. SRINIVASAN,**
Street Delivery Contractor,
7, Pillaiar Koil Street, KUMBAKONAM.

உயர்தரமான

## நாதன்

காப்பித் தூளையே எப்பொழுதும் வாங்கி உபயோகியுங்கள்

எலெக்ட்ரிக் மெஷினில் வறுத்து அரைக்கப்பெற்றது.

குணம், மணம் நிறைந்தது

ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்

## நாதன் காப்பி ஒர்க்ஸ்

பெரியகடைத்தெரு, :: கும்பகோணம்.

உரிமையாளர்: P. சாமிநாதன் & ஸன்ஸ்

# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 2 ஏப்ரல் 1950 இதழ் 4

## குறிப்புகள்

**புதிய சட்டங்கள்:** புதிது புதிதாய் வரும் பலவகைப்பட்ட அகில இந்திய (மத்திய) சட்டங்களையும், சென்னைச்சட்டங்களையும்நேயர்கள் காலதாமதமின்றித் தெரிந்து கொள்ளும் பொருட்டு நம் "வக்கீல்" பத்திரிகையில் இந்த இதழ் முதல் ஒரு புது முறை கையாளப் பட்டிருக்கிறது. புதிய சட்டங்கள் இனி இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படும். ஒரு பகுதியில் இவ்வருட ஆரம்ப முதல்என்ன என்ன சட்டங்கள் 'பாசாகி' அமுலுக்கு வந்து விட்டன என்று நேயர்கள் சுருக்கமாயும், தேதி எண் வரிசையாகவும் மாதந்தோறும் தெரிந்து கொள்ளலாம். மற்றொரு பகுதியில் வழக்கம் போல் இப்புதிய சட்டங்களில் பொது மக்களுக்குத் தேவையான சட்டங்கள் பொறுக்கப்பட்டும் விவரமாயும் விமர்சனங்களுடன் தெளிவுபடுத்தப்படும். இவ்விதம் செய்வது சில குறிப்பிட்ட விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டிய நேயர்களுக்கு மிக உபயோகமுள்ளதாக இருக்கும். சட்டங்களை அனுசரித்து, சர்க்கார் முதலிய அதிகாரிகளால் செய்யப்படும் விதிகள், உத்தரவுகள், அறிக்கைகள் முதலியவை எப்பொழுதும் போல் தனியாகக் கடைசிப் பக்கங்களில் தான் இருந்து வரும்.

**பாக பத்திரங்களுக்கு ஸ்டாம்பு உயர்த்தப் படலாம்:** இப்பொழுது பாக பத்திரங்களுக்கு ஸ்டாம்பு கணக்குச் செய்வதில், பிரிக்கப்படும் பாக சொத்துக்கள் சர்க்கார் கிஸ்தி செலுத்தும் சொத்துக்களாக இருந்தால் அவைகளுக்குள்ள ஒரு வருட கிஸ்தியைப் போல் 5 மடங்கு தொகையை சொத்தின் பொருமானமாக வைத்து அதற்கு ஸ்டாம்பு வாங்க வேண்டுமென்று ஸ்டாம்பு சட்டத்தில் இருக்கிறது. நில விலை உயர்வினால் வருட கிஸ்தியைப் போல் 25 மடங்குத் தொகையைச் சொத்தின் பொருமானமாக வைத்து அதற்கு ஸ்டாம்பு வாங்க வேண்டுமென்று, ஸ்டாம்புச் சட்டத்தைத் திருத்த சென்னை சர்க்கார் ஒரு மசோதா கொண்டுவந்திருக்கின்றனர்.

**கேள்விகளுக்கு உடனே நேரில் பதில் கிடைக்க:** கேள்விகள் கேட்கும் நேயர்கள் பலர் பத்திரிகையில் பதில் வெளிவரும் முன்னதாகவே நேரடியாகத் தங்களுக்குப் பதில் அனுப்பும்படி எழுதுகின்றனர். வரிசைக் கிரமமாய் அவர்களின் கேள்வித் தாள்களைப் பரிசீலனை செய்யும் போதுதான் அவர்கள் எதிர் பார்த்த விதம் எங்களால் பதில் அனுப்ப முடியாமல் போய் விட்டதைக் கவனிக்க நேரிடுகிறது. ஆகையால், இனி பத்திரிகையில் வரிசையாய்ப் பதில் வெளியாகு முன் ஒரு கேள்விக்குப் பதிலை நேரில் கடிதத்தின் மூலம் தெரிவிக்கும்படி எழுதும் நேயர்கள் தமது விலாசமெழுதப் பட்ட கவர் ஒன்றும், ரூபாய் ஒன்றுக்குத் தபால் ஸ்டாம்பும் சேர்த்து கேள்வித் தாளுடன் வைத்து ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். கேள்வி-பதில் பகுதியின் ஆரம்பத்தில் கண்டிருக்கும் மற்ற விதிகளின்படிதான் கேள்விகள் இருக்க வேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித் தனியாக அனுப்பப்பட வேண்டும்.

18796

# புதிய சட்டங்கள்

(சௌ... வரிசையாகவும்)

## 1950-ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

(இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப் பட்டவை)

1 ஆவது சட்டம்: பாகிஸ்தானத்திலிருந்து இந்தியாவிற்கு வந்த அகதிகளுக்கு உதவி செய்ய 1948ல் ஏற்பட்ட சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப் பட்டிருக்கிறது; 21-2-50ல் சட்டமாயிற்று.

2 ஆவது சட்டம்: ஒருவர் புதிதாய்க் கண்டு பிடித்த யந்திரங்களின் உரிமைகளையும் புது மாதிரிகளையும் காப்பாற்றும் பொருட்டு ஏற்பட்டிருக்கும் (Patents and Designs Act) சட்டப்படி சில காரியங்களைச் செய்ய கெடுக்கள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. அகதிகள் விஷயத்தில் இக் கெடுக்களை நீடிக்க இச் சட்டம் அதிகாரம் கொடுக்கின்றது. 18-2-50ல் சட்டமாயிற்று.

3 ஆவது சட்டம்: இன்ஸால்வெண்டு சட்டங்களில் சில திருத்தங்கள் செய்யப் பட்டிருக்கின்றன. முக்கியமாய், கடன் கொடுக்க முடியாதவர் எந்தச் செய்கைகளைச் செய்தால் அவரை இன்சால்வெண்டாகச் செய்யலாமென்று இருக்கின்றது. அச் செய்கைகள் ஏற்பட்ட மூன்று மாதங்களுக்குள் மனுக் கொடுத்தால்தான் அவரை இன்சால்வெண்டாக்கலாம். இம் மூன்று மாத கெடு, கோர்ட்டு மூடப் பட்டிருக்கும் போது முடிவடைந்தால், கோர்ட் திறக்கும் தினத்தன்று மனுக் கொடுக்கலாமென்று சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. இது விஷயத்தில் இருந்த சந்தேகங்கள் இத் திருத்தச் சட்டத்தால் நிவர்த்தி செய்யப் படுகின்றன. இன்னும் 'டிஸ்சார்ஜ்' சம்பந்தமாய், சில திருத்தங்களும் இருக்கின்றன. 18-2-1950ல் சட்டமாயிற்று.

4 ஆவது சட்டம்: இந்தியாவின் பாதுகாப்புக்காகவும் பொது ஜன அமைதியையும், பொது ஜனங்களுக்கு அத்தியாவசியமான பொருள்கள் கிடைப்பதையும் பங்கம் செய்ய எத்தனிப்பவர்கள், குற்றம் செய்யுமுன்பே, சர்க்கார் உத்தரவின் பேரில் (அதாவது நீதிஸ்தலங்களில் வழக்குத் தொடர்ந்து விசாரணையில்லாமல்) ஒரு வரைக் காவலில் வைத்திருப்பதற்காக இச் சட்டம். பல மாகாணங்களில் இது விஷயமாய் அமுலில் இருந்த சட்டங்கள் குடியரசுச் சட்டப்படி செல்லுமா என்ற சந்தேகங்கள் சுப்ரீம் கோர்ட்டாரின் ஒரு தீர்ப்பினால் ஏற்பட்டது. ஆகையால் அகில இந்தியாவிற்கும் அமுலில் இருக்கும்படி இச் சட்டம் இந்திய பார்லிமெண்டால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 25-2-1950ல் சட்டமாயிற்று.

5 ஆவது சட்டம்: ஏற்றுமதி இறக்குமதி சாமான்களின் தீர்வைப்பட்டிச் சட்டம் (Indian Tariff Act) சில சமான்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. 24—2—1950ல் சட்டமாயிற்று.

6 ஆவது சட்டம்: (27—2—1950) 1947 ஆம் வருடத்திய இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டம் திருத்தப் பட்டிருக்கிறது.

7 ஆவது சட்டம்: (27-2-1950) எல்லா ராஜ்யங்களிலும் உள்ள ஹைகோர்ட்டுகளும், ஜுடிஷியல் கமிஷனர் கோர்ட்டுகளும் உபயோகப்படுத்தும் அதிகார முத்திரையில் இந்தியக் குடியரசின் சின்னமாகிய அசோக சக்கரமும் 'சத்தியம்தான் ஜெயிக்கும்' என்ற அர்த்தமுள்ள தேவ நாகரி வார்த்தைகளும் இருக்க வேண்டுமென்று.

8 ஆவது சட்டம்: (27—2—1950) 1947 ஆம் வருடத்திய கப்பல் சட்டத்தை திருத்த.

9 ஆவது சட்டம்: (27—2—1950) 1938 ஆம் வருடத்திய தேயிலை கட்டுப்பாடு சட்டத்தை திருத்துவது.

10 ஆவது சட்டம்: (1—3—1950) கிழக்குப் பாகிஸ்தானத்திலிருந்து இந்தியாவின் கிழக்குக்கோடி ராஜ்யமாகிய அஸ்ஸாம் ராஜ்யத்திற்குள் இந்தியாவின் அமைதியைக் கெடுக்கும் நோக்கத்துடன் உட்புகுந்திருக்கும் அன்னியர்களை அகற்ற.




( பொறுக்கியும் - விவரமாயும் )

## இந்தியக் குடியரசு அமைப்புச் சட்டம்

# ஜீவாதார உரிமைகள் எவை?

சுதந்திர இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றி இரண்டொரு விஷயங்களை மறுபடியும் ஞாபகப்படுத்திக் கொள்வோம். அரசியல் அமைப்புச் சட்டம் என்பது இந்திய மக்கள் தங்களுக்காக, பிரதிநிதிகள் மூலம், ஏற்படுத்திக் கொண்ட ஒரு திட்டம். இனி நம் நாட்டை நாமே ஆண்டு கொள்ளுவதற்காக ஒவ்வொரு காரியத்திற்கும் தனித்தனி ஸ்தாபனங்களை அரசியல் நிர்ணய சபை மூலம் சிருஷ்டி செய்தோம். நமக்குச் சட்டங்கள் செய்ய இந்திய யூனியன் பார்லிமெண்டை உண்டாக்கினோம். சில விஷயங்களில் அந்தந்த ராஜ்யங்களில் (மாகாணங்களில்) சட்டம் செய்ய ராஜ்ய சட்ட சபைகளை ஏற்படுத்திக்கொண்டோம். எந்தெந்த விஷயங்களில் எந்தெந்தச் சட்ட மன்றங்கள் அல்லது அதிகாரிகள் சட்டம் செய்யலாமென்றும் விதிகள் ஏற்படுத்தினோம். ஆனால் சில விஷயங்களில் மட்டும் நமக்குள்ள உரிமைகளைப் பாதித்து எந்தப் பார்லிமெண்டும், எந்தச் சட்டசபைகளும் சட்டங்கள் செய்யக் கூடாதென்றும் இந்த உரிமைகளை எந்தச் சர்க்காரும் சர்க்கார் அதிகாரிகளும் மறுக்கவும், எடுக்கவும், குறைக்கவும் கூடாதென்றும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம், தடுத்திருக்கிறோம். இந்த உரிமைகள்தான் அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஜீவாதார உரிமைகள் என்று சொல்லப்படுகின்றன. இவை யாரால் எவ்விதம் பாதிக்கப்பட்டாலும் நாம் நேரடியாக நமது சுப்ரீம் கோர்ட் என்ற மாபெறும் நீதிமன்றத்தை அண்டலாமென்றும் விவரமாகச் சென்ற இதழில் கவனித்தோம்.

இப்பொழுது இந்த ஜீவாதார உரிமைகள் எவை என்று கொஞ்சம் நுட்பமாய்க் கவனிப்போம். அரசியல் அமைப்புச் சட்டத்தில் மூன்றும் பாகத்தில் இவை விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் விவரம்:

1. **சமத்துவத்தை வற்புறுத்தும் உரிமைகள்:** இந்தியாவிலுள்ள எல்லா மக்களும் சமமாகப் பாவிக்கப்பட்டு, சட்டங்கள் செய்யப்பட வேண்டும். ஒருவருக்கொருவர் பாரபட்சம் காண்பித்துச் செய்யப்படும் சட்டங்கள் செல்லா. இந்திய எல்லைக்குள் சட்டங்களால் அளிக்கப்படும் பாதுகாப்பும் எல்லா மக்களுக்கும் சமமாக இருக்க வேண்டும். மதம், இனம், ஜாதி, ஆண் பெண் வித்தியாசம், பிறப்பிடம் இவை காரணமாக அரசாங்கமும் சட்டசபை முதலியவைகளும் இந்தியப் பிரஜைகளுக்குள் ஏற்றத் தாழ்வும், பாரபட்சமும் காண்பிக்கக் கூடாது. குறிப்பாக, மேற்கண்ட காரணங்களைக் கொண்டு எந்த இந்தியப் பிரஜையும், கடைகள், பொது சிற்றுண்டிச் சாலைகள், சாப்பாட்டு விடுதிகள், பொது வேடிக்கை காண்பிக்கும் ஸ்தலங்கள், இவைகளுக்குப் போவதைத் தடுக்கக் கூடாது. அதற்காக நிபந்தனைகள் ஏற்படுத்தவும் கட்டணங்கள் ஏற்படுத்தவும்கூடாது. அது போலவே சர்க்காருக்குச் சொந்தமான அல்லது சர்க்கார் பணத்தைக் கொண்டு பராமரிக்கப் படுகிற, அல்லது பொது ஜனங்

களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட கிணறுகள், குளங்கள், படித் துறைகள், ரஸ்தாக்கள், பொது ஜனங்கள் தங்குமிடங்கள் இவைகளை உபயோகப்படுத்தும் விஷயத்திலும் எவரும் தடுக்கப்படக் கூடாது. ஆனால் ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் வசதி செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரமுண்டு. சமத்துவத்தை வற்புறுத்த இன்னும் ஒரு முறையும் கையாளப்படுகின்றது. அதாவது சர்க்கார் உத்தியோகங்களை வகிக்க எல்லா இந்தியப் பிரஜைகளுக்கும் சமசந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும் என்பது. ஒருவருடைய மதம், இனம், ஜாதி, ஆண் பெண் வித்தியாசம், பிறப்பிடம் இவை காரணமாக ஒருவர் சர்க்கார் உத்தியோகத்தை வகிக்க அருகதை அற்றவர் என்று எந்தச் சர்க்காரும் சொல்ல முடியாது. ஆனால் படிப்பு, தொழிற் பயிற்சி முதலிய யோக்கியதைகள் இருந்தால்தான் ஒரு உத்தியோகததை வகிக்க முடியுமென்று சர்க்கார் விதிகள் செய்யலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட மதத்தை அல்லது ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு அந்த உத்தியோகம் கொடுக்கப்பட மாட்டாதென்று சொல்லமுடியாது. இப் பொது விதிக்கு மூன்று விதி விலக்குகள் மட்டில் உண்டு. அவையாவன: (1) ஒரு ராஜ்யத்தில் (மாகாணத்தில்) சில குறிப்பிட்ட உத்தியோகங்களை வகிக்க அந்த ராஜ்யத்தில் ஏற்கனவே வசித்து வந்தவராக இருக்க வேண்டுமென்று நிபந்தனை உண்டாக்கி இந்திய யூனியன் பார்லிமெண்டு சட்டம் செய்யலாம். ராஜ்ய சட்டசபைகள் இவ்விதம் சட்டம் செய்யமுடியாது (2) எந்த ராஜ்யத்திலும் ஏதாவது பிற்போக்கு வகுப்பினர், அதாவது முன்னேற்ற மடையாத வகுப்பினர் (Back-ward classes) இருந்து அவர்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி சர்க்கார் உத்தியோகங்களில் அவர்கள் ஸ்தானம் வகிக்கவில்லை என்று அந்த ராஜ்யம் அபிப்பிராயப்பட்டால் அவர்களுக்குச் சர்க்கார் உத்தியோகங்களில் சில ஸ்தானங்களை ஒதுக்க அந்த ராஜ்யத்திற்கே அதிகாரமுண்டு. (3) தவிர மத ஸ்தாபனங்கள் சம்பந்தமான உத்தியோகங்களை அந்தந்த மதத்தைத் தழுவியவர்கள் தான் வகிக்கலாமென்று சட்டம் செய்யலாம். சமத்துவத்தை நிலைநாட்ட இன்னும் சில விஷயங்களில் முன் ஜாக்கிரதை காட்டப்பட்டிருக்கிறது. தீண்டாமை என்பது ஒழிக்கப்பட்டது. நடைமுறையில், எந்த ரூபத்திலும் தீண்டாமை என்பது தடுக்கப்பட்டிருக்கிறது. தீண்டாமையால் ஏற்படும் நிர்ப்பந்தங்களை நடைமுறையில் அனுஷ்டிப்பது குற்றமாகும். தண்டனை உண்டு. இது விஷயத்தில் சட்டங்கள் ஏற்படுத்தப்படும். மேலும் இனி இந்தியாவில் பட்டங்களும் இருக்கமாட்டா. அரசாங்கம் இனி எவருக்கும் 'ராவ்பகதூர்' 'திவான் பகதூர்' போன்ற யாதொரு பட்டமும் அளிக்காது. ஆனால் ராணுவத்திலும் கல்வியிலும் விசேஷ யோக்கியதைகளைக் காண்பிக்கக்கூடிய (பி. ஏ.; எம். ஏ. போன்ற) பட்டங்கள் மட்டில் உண்டு. தவிர இந்தியப் பிரஜை எவரும் அன்னிய அரசாங்கத்தின் பட்டங்களையும் ஒப்புக்கொள்ளக் கூடாது. இந்தியப் பிரஜை அல்லாதவர்களும் இந்திய அரசாங்கத்தில் எவ்வித பதவி அல்லது உத்தியோகம் வகித்தாலும், ஜனாதிபதி அவர்களின் அனுமதியின்றி அன்னிய அரசாங்கமளிக்கும் எவ்வித பட்டங்களையும் ஒப்புக்கொள்ளக்கூடாது. இந்திய சர்க்கார் பதவி வகிக்கும் எவரும் அன்னிய ராஜ்யங்களிடமிருந்து எவ்வித வெகுமதி அல்லது பதவிகளையும் இந்திய ஜனாதிபதி அவர்களின் அனுமதியில்லாமல் பெற முடியாது.

**2. சுதந்திரத்தை நிலைநிறுத்தும் உரிமைகள்:** இந்தியா அன்னிய ஆட்சியிலிருந்து விடுபட்டு விட்டது. இது ஒரு வகைச் சுதந்திரம் தான். ஆனால் ஒவ்வொரு சுதந்திர நாட்டிலும் பொது மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றனரென்று ஏற்படாது. ஒரு தனி மனிதனே ராணுவ பலத்தைக் கொண்டு பொது மக்களை ஆண்டு வரலாம். அல்லது ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரும் பான்மையான அங்கத்தினர்களின் பலத்தைக் கொண்டு இஷ்டப்படி சட்டசபைகளில் சட்டங்கள் செய்தும், மந்திரி சபைகள் அமைத்தும், தங்கள் கட்சிக்கு விரோதமாய் ஒருவரும் பேச முடியாமலும் எழுத முடியாமலும் செய்து விடலாம். அவர்கள் செய்வது சரி அல்ல என்று

சொல்லக் கூட முடியாத நிலைமையை ஏற் படுத்தி விடலாம். இவ்வித அபாயங்கள் நம் நாட்டுக்கு நேரிடாதபடி சில பிரஜா உரிமைகள் பிரகடனம் செய்யப்பட்டிருக் கின்றன. சில நிபந்தனைகளுக்குட்பட்டு இந்தியப் பிரஜை ஒவ்வொருவருக்கும் கீழ்க் கண்ட ஏழு வகையான சுதந்திரம் உண்டு.

1. இஷ்டப்படி பேசவும், எழுதவும் உரிமை உண்டு.

2. அமைதியாக ஆயுதமில்லாமல் கூட் டம் கூட உரிமை உண்டு.

3. சங்கங்கள் அமைத்துக் கொள்ள உரிமை உண்டு.

4. இந்தியாவில் எந்த இடத்திற்கும் தாராளமாய்ப் போய்வர உரிமை உண்டு.

5. இந்தியாவில் எந்த இடத்தில் வசித்து வரவும் குடியேறவும் உரிமை உண்டு.

6. சொத்துக்கள் சம்பாதிக்கவும், வைத் திருக்கவும், அவைகளைப் பராதீனங்கள் செய்யவும் உரிமை உண்டு.

7. எவரும் எந்த உத்தியோகம், தொழில் அல்லது வியாபாரம் நடத்தவும் உரிமை உண்டு.

இவ்வுரிமைகள் எவ்வித நிபந்தனைகளு மில்லாமல் இருந்தால் பொது மக்களுக்கே விபரீதமாக முடியும். உதாரணமாக: பேச் சுச் சுதந்திரமிருக்கிறதென்று ஒருவர் துர்ப் பாஷையாக மற்றொருவரை தூஷித்துக் கொண்டும், எழுதிக் கொண்டுமிருக்கலாம். இன்னுமொரு உதாரணத்தையும் பார்ப் போம்: எவரும் எந்தத் தொழிலையும் நடத்தலாமென்ற உரிமை யாதொரு நிபந் தனையுமில்லாமலிருந்தால், யாதொரு பயிற்சியுமில்லாதவர் ஒரு டாக்டராகத் தொழில் செய்ய ஆரம்பிக்கலாம். அது பொது மக்களுக்குப் பேராபத்தாகவே முடி யும். ஆகையால் பொது மக்களின் நன் மையை உத்தேசித்தே இந்த உரிமைகளை அனுபவிக்கும் முறையில் சில நிபந்தனைகளை ஏற்படுத்தச் சட்ட சபைகளுக்கும் அரசாங் கத்திற்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக் கிறது. இந்த நிபந்தனைகளைக் கவனிப் போம். அவதூறாக அல்லது, மானக்கேடு உண்டாகும்படி பேசுவது அல்லது எழுது வது; கோர்ட்டுகளை அவமதிப்பது; ஆபாச மான விஷயங்களைப் பிரசுரம் செய்வது; அரசாங்கத்தையே கவிழ்த்து விடும்படி பேசுவது, எழுதுவது இந்த விஷயங்களில் சட்டங்கள் செய்து பேச்சுரிமை எழுத் துரிமை இவைகளை ஒரு கட்டுக்குள் கொண்டு வரலாம். பொது அமைதியை உத்தேசித்து, கூட்டம் கூடும் உரிமையை யும் சங்கங்கள் அமைத்துக் கொள்ளும் உரிமையையும் சில நிபந்தனைக்குள்ளாக்க லாம். இந்தியாவில் எங்கும் போகலாம், வசிக்கலாம், குடியேறலாம் என்ற உரிமை கள் கூடப் பொது மக்களின் நன்மைக் காகவோ சில குறிப்பிட்ட மலை ஜாதியினர் வசிக்கும் இடங்கள் சம்பந்தமாகவோ, சில நிபந்தனைகளுக்குள்ளாக்கப்படலாம். அந் தந்தத் தொழில்கள் சம்பந்தமாய், தேவை யான படிப்பு அல்லது பயிற்சி இருக்க வேண்டுமென்று விதிகள் ஏற்படுத்தவும் அரசாங்கத்திற்கு அதிகாரமுண்டு.

சுதந்திர சம்பந்தமாய் இன்னும் சில உரிமைகளும் உண்டு. குற்றங்கள் எவை என்று பார்லிமெண்டும் சட்டசபைகளும் சட்டம் செய்யலாம். இவ்விதமான சட் டங்கள் ஏற்படுத்தப்படுமுன்பே நடந்த ஒரு செய்கையைப்பிந்தி ஏற்படும் சட்டத்தின் மூலம் குற்றமாக்க சட்டசபைகளுக்கு அதி காரமில்லை. ஒரு குற்றத்திற்கு ஒரு முறை தான் ஒருவர் பேரில் குற்றம் சாட்டலாம்; தண்டிக்கலாம். குற்றம் சாட்டப்பட்ட எவரும் தமக்கு விரோதமாகச் சாக்ஷியம் சொல்லவேண்டுமென்று வற்புறுத்திச் சட் டங்கள் செய்யமுடியாது. சட்டத்தில் இருக்கும் முறைப்படிதான் ஒருவருடைய உயிரையும், சொந்த சுதந்திரத்தையும் பாதிக்கமுடியும். அரெஸ்ட் செய்யப்பட்ட வருக்கு உடனே அதன் காரணங்களைத் தெரிவிக்கவேண்டும். அவருக்கு இஷ்டப் பட்ட வக்கீலைக் கலந்து கொள்ளவும் அவ ரைக்கொண்டு கக்ஷியாடவும் உரிமை உண்டு. பிரயாண நேரத்தை நீக்கி அரெஸ்ட் செய்யப்பட்ட 24 மணி நேரத் திற்குள் அவர் ஒரு மாஜிஸ்ட்ரேட் முன்பு ஆஜர்படுத்தப்படவேண்டும். அதற்குமேல் ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் உத்திரவில்லாமல்

எவரும் காவலில் வைக்கப்படக்கூடாது. இந்த உரிமை விரோத நாட்டின் பிரஜைகளுக்குப் பொருந்ாது. மேலும் எந்தச் சந்தர்ப்பங்களில் நாட்டின் அமைதியையும் பொது நன்மையும் உத்தேசித்து ஒருவர் குற்றம் செய்யும் முன்பே அவரைத் தடுக்கும் முறையில் அவரைப் பந்தோபஸ்தில் வைக்கச் சட்டங்கள் செய்ய இந்திய யூனியன் பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு. ராஜ்ய சட்ட சபைகள் இவ்விதம் சட்டம் செய்தால், ஒருவரை அரெஸ்ட் செய்து மூன்று மாதங்களுக்குள் உயர் நீதிபதி அந்தஸ்துள்ளவர்கள் அடங்கிய ஒரு ஆலோசனைச் சபையாரின் சிபார்சு இன்றி அவரைக் காவலில் வைக்க முடியாதென்று சட்டத்திலேயே ஷரத்திருக்கவேண்டும்.

3. அடிமை வாழ்வு இல்லை: கட்டாய வேலைகள் செய்யும்படி ஒருவரை ஒருவர் வற்புறுத்த முடியாது. (பொதுக்காரியங்களுக்காக மட்டில் ஜாதி மத வித்தியாசமில்லாமல் எவரும் வேலை செய்யவேண்டுமென்று வற்புறுத்த அரசாங்கத்திற்கு மட்டில் உரிமை உண்டு.) பதினான்கு வயது பூர்த்தி ஆகாத குழந்தையை எந்தத் தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும், அபாயகரமான வேலைகளிலும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளக்கூடாது.

4. மத சுதந்திரம்: இந்தியாவில் வசிக்கும் எவரும் எந்த மதத்தையும் தழுவலாம், அனுஷ்டிக்கலாம்; அதைப்பரப்பவும் செய்யலாம். தம்தம் மனச்சாட்சிக் கொத்த நம்பிக்கைகளை வைத்துக் கொள்ளலாம். இது விஷயத்தில் சட்டசபைகளோ அரசாங்கமோ தலையிட முடியாது. ஆனால் மதசம்பந்தமான விஷயங்களுடன் சம்பந்தப்பட்ட லௌகிக விஷயங்களை, அதாவது பொருளாதார, அல்லது அரசியல் விஷயங்களை ஒழுங்குபடுத்த அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. ஹிந்துக்களுடைய பொது மதஸ்தாபனங்களை எல்லா ஹிந்துக்களுக்கும் பொதுவாகச் செய்யவும் உரிமை உண்டு. மேலும் பொது அமைதி நல்லொழுக்கம், சுகாதாரம் இவைகளுக்குக் குந்தகமில்லாமல் (1) எந்த மதத்தினரும் தங்களுக்கென்று மத ஸ்தாபனங்களையும் தர்ம ஸ்தாபனங்களையும் ஏற்படுத்திக் கொண்டு பராமரிக்கலாம் (2) மதசம்பந்தமான விஷயங்களைத் தாங்களே நிர்வாகம் செய்துகொள்ளலாம் (3) அதற்காக ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் வாங்கிக் கொள்ளலாம் (4) அச்சொத்துக்களைச் சட்டப்படி நிர்வாகம் செய்யலாம். ஒரு குறிப்பிட்ட மத ஸ்தாபனங்களைப் பாதுகாக்கவோ, குறிப்பிட்ட மதத்தை பரவச் செய்யவோ வரி கொடுக்க வேண்டுமென்று எவரையும் வற்புறுத்த அரசாங்கத்திற்கு உரிமை இல்லை.

அரசாங்கத்தால் நடத்தப்படும் கல்வி ஸ்தாபனங்களில் மத சம்பந்தமான உபதேசம் அல்லது படிப்பு இருக்காது.

ஆனால் ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட மதக் கல்வியை உபதேசம் செய்யும் பொருட்டு ஏற்பட்டிருக்கும் கல்விஸ்தாபனங்களை, சர்க்கார் நிர்வாகம் செய்தால் இந்த விதி கிடையாது.

சர்க்கார் உதவி அல்லது அங்கீகாரத்தின் மேல் நடத்தப்படும் கல்விஸ்தாபனங்களில் எந்த மாணாக்கரையும் அவருடைய (அல்லது அவர் மைனராக இருந்தால் அவருடைய கார்டியனுடைய) அனுமதியின்றி மத உபதேசங்களில் கலந்து கொள்ளும்படி நிர்ப்பந்தம் செய்யக் கூடாது.

5. சிறு பான்மையோரின் கலாசார, கல்வி, உரிமைகள்: இந்தியாவின் எந்தப் பாகத்தில் வசிக்கும் பிரஜைகளுக்கும் அவரவர்களுடைய தனித்தனி பாஷை, எழுத்து, கலாசாரம் இவைகளைக் காப்பாற்றிக்கொள்ளும் உரிமை உண்டு. சர்க்காருக்குச் சொந்தமான அல்லது சர்க்கார் உதவியால் நடத்தப்படும் எந்தக் கல்வி ஸ்தாபனங்களிலும் சேர்ந்து படிப்பதை, அவருடைய மதம், இனம், ஜாதி, பாஷை இவை காரணமாக எந்த இந்தியப் பிரஜையையும் தடுக்க முடியாது.. சிறு பான்மையோர்களுக்கு, அவர்கள் மதத்தில் சிறு பான்மையோராக இருந்தாலும் சரி, பாஷையில் சிறு பான்மையோராக இருந்தாலும் சரி, தங்களுக்கு உகந்த கல்வி ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்; அவைகளை நிர்வாகம் செய்ய

லாம்; அவர்கள் சிறுபான்மையோர் என்ற காரணத்தினுல் அவர்களுக்குச் சர்க்கார் உதவி மறுக்க முடியாது.

6. **சொத்து சம்பந்தமான உரிமைகள்:** சட்ட பூர்வமாக அல்லாது எவரும் தம் சொத்துக்களை இழக்க வேண்டியதில்லை. பொதுக்காரியங்களுக்காகச் சர்க்கார் எந்த ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை எடுத்துக் கொண்டாலும் சொத்துக்காரருக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும். நஷ்ட ஈடு எவ்வளவு என்று சட்டத்திலேயே காணப்பட்டிருக்கவேண்டும். அல்லது நஷ்ட ஈடு எப்படிக் கணக்குச் செய்யவேண்டும் எப்படிக் கொடுக்கப்படவேண்டுமென்ற விஷயங்கள் அச்சட்டத்திலேயே இருக்க வேண்டும். இவ்வித சட்டங்கள் ராஜ்ய (மாகாண) சட்டசபைகளால் ஏற்பட்டால் ஜனுதிபதி அவர்களின் அங்கீகாரம் வேண்டும். இதற்கு மாருக ஏற்கனவே சட்டங்கள் ஏற்பட்டிருந்தால், அரசியல் அமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த பதினெட்டு மாதத்திற்கு முன் ஏற்பட்ட (அதாவது 26-5-1948-க்கு முன் ஏற்பட்ட) சட்டங்கள் செல்லும். 26—5—1948-க்குப்பின் ஏற்பட்ட சட்டங்களை 26—2—1950-க்குள் ஜனுதிபதி அவர்களுக்கு அங்கீகாரம் செய்ய அனுப்பி, அவரும் பொது விளம்பரத்தின் மூலம் அங்கீகாரம் செய்த சட்டங்கள்தான் செல்லும். மற்றவை செல்லா.

## குற்றம் செய்வதற்கு முன்பே காவலில் வைக்கச் சட்டம்

[1950 ஆம் வருடத்திய 4-வது மத்திய சட்டம் இந்திய பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டது. 25-2-1950ல் ஜனுதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது.]

சாதாரணமாய் ஒரு குற்றம் நடந்த பிறகுதான், அதை யார் செய்தாரோ, அல்லது யார் செய்ததாகச் சந்தேகம் ஏற்படுகின்றதோ, அவரை அரெஸ்டு செய்யலாம். மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவின் பேரில் அவரைக்காவலில் (ரிமாண்டில்) வைக்கலாம்; அல்லது ஜாமீனில் விடுதலை செய்யலாம். குற்றம் செய்ததற்காக அவர் பேரில் குற்றம் சாட்டப்பட்டு, கோர்ட்டில் வழக்குத் தொடரப்படும். விசாரணையில் அவர் கக்ஷி ஆடலாம். அவர் குற்றம் செய்ததாக ஏற்பட்டால், நீதிபதி, அவரைத் தண்டிப்பார். அவர் குற்றவாளி அல்ல என்று ஏற்பட்டால் உடனே அவர் விடுதலை அடைவார். இது சாதாரண வழக்கு முறைச் சட்டம்.

ஆனுல் இப்பொழுது இந்நாடு இருக்கும் சூழ்நிலையில் தேசத்திற்கோ பொது மக்களுக்கோ ஆபத்தும் கெடுதியும் விளைவிக்கக் கூடிய செய்கைகளை ஒருவர் செய்யுமுன்பே அதைத் தடுப்பதுதான் அவசியம். பெரிய கெடுதி விளைந்த பிறகு அதை விளைவித்தவர் மீது கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து, விசாரணை செய்து, அவரைத் தண்டிப்பது பிரயோஜனமில்லாமல் போய்விடும்.

ஒருவர் குற்றவாளி என்று நீதியஸ்தலங்களில்தீர்மானமான பிறகு அவரைத்தண்டித்து, சிறையில் வைப்பது தான் ஜனநாயக முறைக்கேற்ற தென்றுலும், ஜனநாயக ஆட்சிக்கே ஆபத்து விளைவிக்கும் செய்கைகளை அரசாங்கமே நிர்வாக முறையில் முளையிலேயே கிள்ளி எறிவதை எவரும் ஆட்சேபிக்க முடியாது. அவ்விதம் செய்யத்தான் இச்சட்டம்.

இச்சட்டப்படி (1) இந்தியாவின் பாதுகாப்பு, அயல் நாட்டுடன் உறவு, பொது ஜன அமைதி இவைகளுக்குப் பங்கம் ஏற்படும்படியோ (2) நாட்டின் பந்தோபஸ்துக்கோ, பொதுஜன அமைதிக்கோ கெடுதி ஏற்படும்படியோ (3) பொது ஜனங்களுக்கு அத்தியாவசியமான பொருள் கிடைப்பதற்கு அல்லது ஊழியம் செய்வதற்குத் தடை ஏற்படும்படியோ ஒருவர் செய்வார் என்று மத்திய சர்க்காருக்கு, அல்லது ராஜ்ய சர்க்காருக்கு, சந்தேகம் உண்டானுல், அவரை இச்சட்டபடி காவலில் வைத்திருக்க சர்க்கார் உத்தரவிடலாம். மேலே

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)




[இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட்டிலும் பல மாகாணங்களிலுள்ள ஹைகோர்ட்டுகளிலும் சமீபத்தில் நடந்த வழக்குகளில் உயர் நீதிபதிகளால் அளிக்கப்பட்ட சில தீர்ப்புக்களின் முக்கிய அம்சங்களை நமது நேயர்கள் வாசிக்கலாம். அடிப்படையான சட்ட தத்துவங்களை விளக்கும் இங்கிலாந்திலுள்ள நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் இங்கே காணலாம். தொழிற்சாலைகள் சட்டம், ஷாப் சட்டம் இவைகளின்படி முடிவான தீர்ப்பளிக்க அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் தீர்ப்புகளும் சேர்க்கப்படும்.]

## "மாமூல்" — "மரியாதை" எல்லாம் "லஞ்சம்" தான்

**கோர்ட்:** சென்னை ஹைகோர்ட்

**நீதிபதி:** கனம் நீதிபதி பஞ்சாபகேசய்யர் அவர்கள்

**ஆதாரம்:** *1949-2 மதருஸ் லா ஜர்னல் 443*

'லஞ்சம்' வாங்குவது ஒரு பெரிய குற்றம். ஆனால் அதை நீதி ஸ்தலங்களில் மெய்ப்பிப்பது சுலபமல்ல. லஞ்சம் என்பது அனேகமாய் கொடுப்பவர், வாங்குபவர், இருவருக்குள்ளேயே ரகசியமாய் நடக்கும் ஒரு சம்பவம். இதற்கு சாட்சிகள் கிடைப்பது கஷ்டம். பொதுவாக எந்தக் குற்றமும் சந்தேக மற ருசுப்பிக்கப்பட்டால்தான் குற்றவாளிக்குத் தண்டனை ஏற்படும். குற்றங்களைக் குறித்த இந்தியன் பீனல் கோடு என்ற சட்டத்தின் 161-ஆவது பிரிவின்படி ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் (Public Servant) தாம் 'உத்தியோக ரீதியில் செய்ய வேண்டிய ஒரு காரியத்தைச் செய்வதற்கோ செய்யாமலிருப்பதற்கோ' பிரதிப் பிரயோசனமாக (சட்டப்படிக்குள்ள சம்பளத்தைத் தவிர) ஏதாவது வெகுமதிகள் வாங்கினார் என்று ருசுப்பித்தால்தான் 'லஞ்சம்' வாங்கிய குற்றம் ருசுவாகும். ஒரு உத்தியோகஸ்தர் வேறு ஒருவரிடம் ஒரு சாமான் அல்லது பணம் வாங்கியும் அவர் எதற்காக, எந்த உத்தேசத்துடன், அதை வாங்கினார் என்று ருசு இல்லாவிட்டால் அவர் குற்றமற்றவராவார். இதுதான் பழைய சட்டம். ஆனால் யுத்தத்திற்குப் பிறகு நாட்டில் லஞ்சப் பேய் தலை விரித்தாடியதைத் தடுக்கும் நோக்கத்துடன் 1947-ஆம் வருடத்தில் ஒரு புதிய சட்டம் ஏற்படுத்தப்பட்டது. இது லஞ்சத்தைக் கோர்ட்டுகளில் ருசு செய்யும் கடினத்தைக் கொஞ்சம் தளர்த்தியது. இச்சட்டப்படி ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் தம் சம்பளத்தைத் தவிர வேறு எவ்வித வெகுமானத்தையாகிலும் ஒருவரிடம் வாங்கியதாக ருசுப்பித்தாலே போதும்; அது அவர் உத்தியோக ரீதியில் ஒரு காரியத்தைச் செய்யவோ செய்யாமலிருக்கவோ 'லஞ்சம்' வாங்கியதாகவே இச்சட்டத்தால் பாவிக்கப்படும். அப்படி அல்ல என்று குற்றவாளி ருசுப்பித்தால் தான் தப்பலாம். இதுதான் 1947-ஆம் வருடத்திய இரண்டாவது மத்திய சட்டம். பிரஸ்தாப வழக்கில், யுத்தம் முடிந்த பிறகு ஒரு சர்க்கார் காரியாலயத்தில், தாற்காலிகமாக வேலையில் இருந்த சில சிப்பந்திகளை எடுத்து ஆள் குறைப்புச் செய்து வந்தனர். திடீரென்று வேலையை இழக்காமலிருக்கச் சில சிப்பந்திகள் முயற்சி செய்தனர். தலைமை அதிகாரிதான் யார் யாரை வீட்டுக்குப் போகச் சொல்வதென்று உத்தரவு போட அதிகாரமுள்ளவர். அத் தலைமை அதிகாரியுடன் உத்தியோக தோரணையில் நெருங்கிப் பழகும் (கிளெரிகல் சூப்பரவைசர் என்ற)

187696

முக்கிய குமாஸ்தாவைக்கொண்டு சிபார்சு செய்தனர். சிலர் வேலையிலிருந்து நீக்கப் படாமல் உத்தியோகத்திலேயே அமர்த்திக் கொள்ளப்பட்டனர்.

இவ்விதம் நன்மை அடைந்த சிப்பந்திகள் தங்களுக்காகச் சிபார்சு செய்த குமாஸ்தாவை, 'கவனிக்காமல்' இருக்கலாமா? அவருக்குக் கொஞ்சம் 'மரியாதை' செய்தனர். ரொக்கத்தில் ரூ. 100-ம், பவுனில் ஒரு தங்கமோதிரமும் தட்டில் பழங்களும் வைத்து அக்குமாஸ்தாவைக் கண்டு கொண்டனர்; அவருக்குத் தங்கள் நன்றியையும் தெரிவித்துக்கொண்டனர். இவ்வெகுமதியை அங்கீகரித்த குமாஸ்தாவின் சந்தோஷம் நீடிக்கவில்லை. வேலையை இழந்தவர்கள் மட்டில் சும்மா இருப்பார்களா? இதைப்பற்றிக் கையெழுத்தில்லாமல் அதிகாரிகளுக்குக் கிடைத்த 'கோள் பெடிஷன்' என்று வழங்கும் மொட்டைக் கடிதத்தின் மூலம் விசாரணை ஆரம்பமாயிற்று. புலன் விசாரித்த போலீசார் மோதிரத்தையும் [illegible] குமாஸ்தாவிடமிருந்தே கைப்பற்றினர். [illegible] வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட குமாஸ்தா திருவள்ளூர் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப்பட்டார். செங்கல்பட்டு செஷன்ஸ் கோர்ட்டில் அத்தண்டனை உறுதி செய்யப்பட்டது.

தண்டனை அடைந்த குமாஸ்தா ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். அவருக்காக ஹைகோர்ட்டில் வாதாடிய வக்கீல் இரண்டு ரசமான கட்சிகளைச் சொன்னார். (1) குற்றம் சாட்டப்பட்ட குமாஸ்தா சட்ட விரோதமாக ஒன்றும் வாங்கவில்லை. அவர் சிபார்சினால் அனுகூலமடைந்த சிப்பந்திகள், அவருக்கு மரியாதை செய்தனர். அவர்களை அவ்விதம் செய்யும்படி ஒருவரும் கேட்கவில்லை. அவர்கள் தாமாகவே மனப்பூர்வமாகச் செய்த மரியாதை சட்டப்படி 'லஞ்சம்'

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

2, 3, ஆகக்கண்ட விஷயங்களில் மட்டில், மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார் இவர்களுக்கிருக்கும் அதிகாரம்போலவே, ஜில்லா மாஜிட்ரேட்களுக்கும், சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்களுக்கும் சென்னை முதலிய பெரிய நகரங்களில் போலீஸ் கமிஷ்ணருக்கும் அதிகாரம் உண்டு. ஆனால் இவர்கள் ஒருவரைக் காவலில் வைக்கும்படி உத்தரவிட்டால் உடனே ராஜ்ய சர்க்காருக்கு அதைத் தெரிவிக்க வேண்டும்.

இதைத் தவிர (4) ஒரு அன்னியர் இந்தியாவில் வசிப்பதை ஒழுங்கு படுத்தும் பொருட்டோ அவரை நாட்டை விட்டு அகற்றும் வரையிலோ அவரைக் காவலில் வைக்க மத்திய சர்க்காருக்கும் ராஜ்ய சர்க்காருக்கும் அதிகாரமுண்டு.

காவலில் வைக்கப்பட்டவருக்கு உடனே அவரை எதற்காகப் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்ற காரணங்கள் தெரிவிக்கப்படும். அவர் மத்திய சர்க்காருக்கோ ராஜ்ய சர்க்காருக்கோ ஏதாவது தெரிவித்துக் கொள்ள வேண்டுமானாலும் அதற்கும் வசதிகள் அளிக்கப்படும்.

மேலே 3, 4-ஆவதாகக் கண்ட விஷயங்களில் இரண்டு உயர் நீதிபதி அந்தஸ்துள்ளவர்கள் அடங்கிய ஒரு ஆலோசனைச் சபையைச் சர்க்கார் நியமித்து, காவலில் வைக்கப் போதுமான காரணங்கள் இருக்கின்றனவா என்று அபிப்பிராயம் பெறுவார்கள். அவர்கள் அபிப்பிராயப்படி போதுமான காரணங்கள் இருந்தால் ஒருவரை எவ்வளவு காலம் ஆனாலும் காவலில் வைக்கலாம்.

மேலே கண்ட 1, 2 காரணங்களுக்காக ஒருவரை ஆலோசனைச் சபையின் அபிப்பிராயம் பெறாமலே ஒருவருடம் வரை சர்க்காரே காவலில் வைத்திருக்கலாம். ஆனால் 6 மாதத்திற்குள் சர்க்கார் ஒரு உயர் நீதிபதி அந்தஸ்துள்ளவருடன் கலந்து புனராலோசனை செய்வார்கள்.

காவலில் வைக்கப்பட்டிருப்பதின் காரணங்களை நீதிஸ்தலங்கள் கேட்க முடியாது.

ஆகாது என்று ஒரு கட்சி, (2) சிப்பந்திகளை எடுப்பதும் வைத்துக்கொள்வதும் தலைமை அதிகாரி செய்யவேண்டிய காரியம். இக்குமாஸ்தா அதைச்செய்யமுடியாது. அவருடைய சிபார்சைத் தலைமை அதிகாரி கேட்க வேண்டுமென்பது ஒன்றுமில்லை. ஆகையால் உத்தியோக தோரணையில் செய்த காரியத்திற்காக இவ்வெகுமதிகள் கொடுக்கப்பட்டதாக ஆகாது. ஆகையால், இது லஞ்சமல்ல என்பது இரண்டாவது கட்சி. இந்த இரண்டு கட்சிகளையும் நீதிபதி அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. லஞ்சத்தைப் பற்றி மேலே கண்ட சட்டங்களை விளக்கி, 'மரியாதை' 'மாமூல்' 'காணிக்கை' என்பதெல்லாம் 'லஞ்சம்' எனபதற்கு அலங்காரச் சொற்களாகவே நவீன சட்டங்கள் கருதுவதாகவும், லஞ்சம் எப்பொழுதும் மனப்பூர்வமாகத்தான் கொடுக்கப்படுகின்றதென்றும்; 1947 ஆம் வருடத்திய சட்டப்படி தம் சம்பளத்தைத் தவிர வேறு எந்தத் தொகைகளை ஒரு உத்தியோகஸ்தர் வாங்கினாலும் அது சட்டப்படி 'லஞ்சம்' என்று பாவிக்கப்படுமென்றும், அது லஞ்சமல்ல என்று பிரஸ்தாப வழக்கில் எதிரி ருசுப்பிக்க வில்லை என்றும், தாமே ஒரு சிப்பந்தியை எடுத்து வைக்க முடியாவிட்டாலும் தம்முடைய உத்தியோக தோரணையில் அது சம்பந்தமான சிபார்சுகள் செய்ய அக் குமாஸ்தாவுக்கு உரிமை இருப்பதால் அதை, லஞ்சம் வாங்கி, செலுத்தியதாகவே ஏற்படுமென்றும் அவர் குற்றவாளிதான் என்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப் பட்டனர். ஆனால் காரியம் நடைபெறுமுன்பே தமக்கு எவ்வளவு தொகை கொடுக்கவேண்டு மென்று முன் கூட்டியே ஒப்பந்தம் செய்து கொள்ளாமல், பிறகு, கொடுத்ததை மட்டில் பெற்றுக் கொண்டதாலும், அக்குமாஸ்தாவும் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்ததாலும் கொஞ்சம் கருணை காண்பிக்கப்பட்டு, தண்டனை மட்டில் குறைக்கப்பட்டது.

## பஞ்சாயத்தார்கள்முன் ஒரு ஸ்திரீ துர்நடத்தை உள்ளவள் என்று புகார் செய்வது குற்றமாகுமா?

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதி: கனம் நீதிபதி பஞ்சாபகேசய்யர் அவர்கள்

ஆதாரம்: 63 லா வீக்லி 145

ஒருவருக்கு அவமானம் உண்டாக்குவது அல்லது தூஷணை செய்து அவருக்கு மதிப்புக் குறைவு உண்டாக்குவது; அல்லது அவருடைய பெயரைக்கெடுப்பது என்பது ஒரு கிரிமினல் குற்றம். இதற்கு 'நிந்தை' அல்லது 'அபவாதம்' என்றும் சொல்லலாம். ஆங்கிலத்தில் இக்குற்றத்திற்கு 'Defamation' என்றும் பெயர். இக்குற்றத்தை வர்ணிப்பது இந்தியன் பீனல் கோடு என்ற குற்றங்களைக் குறித்த சட்டத்தின் 449 ஆவது பிரிவு. வாயால் சொல்லும் வார்த்தைகளினால், அல்லது எழுத்தால், அல்லது ஜாடை காண்பிப்பதால் கூட ஒருவருக்கு அவமானம் உண்டாகும்படி செய்வதுதான் இக்குற்றம். பரிகாசமாகச் சொல்லும் வார்த்தைகள் கூட மானக்கேட்டை விளைவித்தால் குற்றமாகலாம். உதாரணமாக:- ஒரு கடிகாரம் கெட்டுப் போய்விட்டது என்று வைத்துக் கொள்வோம். ஒருவர் "ராமன் வெகு யோக்கியன்; அவன் அக்கெடிகாரத்தை திருடவில்லை" என்று பரிகாசமாகச் சொன்னால் ராமனுக்கு மானக்கேடு உண்டாகும். இது குற்றமாகும். மற்றொருவர் 'கெடிகாரத்தை யார் திருடியது' என்று கேட்கப் பட்டபோது வாயால் ஒன்றும் சொல்லாமல் ராமனைச் சுட்டிக் காண்பித்தால் அதுவும் ராமனுக்கு மானக்கேடு உண்டாக்கும் குற்றமாகும். மற்றொருவர் வாயாலும் பேசாமல் ஜாடையும் காண்பிக்காமல், ராமன் கெடிகாரத்தைத் திருடிக்கொண்டு ஓடுவது போல் ஒரு சித்திரம் வரைகிறார். இதுவும் ராமனுக்கு மானக்கேடு விளைவிக்கும் குற்றம்தான்.

மானக்கேடு உண்டாக்கும் குற்றத்தைப் பற்றி மேலே சொல்லப்பட்டது பொதுவான

விதி. இதற்குப் பல விதி விலக்குகள் இருக்கின்றன. பல சந்தர்ப்பங்களில் பேசும் வார்த்தைகளும் எழுதப்படும் எழுத்துகளும் ஒருவருக்கு மானக்கேட்டை விளைவித்தாலும் அவை குற்றமாகா. (ராமன் திருடினென்று போலீஸ்காரரிடம் சொல்வதும் கோர்ட்டில் சாட்சி சொல்வதும் குற்றமாகாது).

இவ்விதம் பத்துச் சந்தர்ப்பங்களில் சொல்லப்படும் வார்த்தைகளும் எழுதப் படும் விஷயங்களும் ஒருவருக்கு எவ்வளவு மானக்கேட்டை விளைவிக்கும் அவதூருக இருந்தாலும் குற்றமாகா. அவைகளைச் சுருக்கமாகக் கவனிப்போம்:—

(1) பொது நன்மைக்காக ஒருவரைப் பற்றிய உண்மையான விஷயத்தைச் சொல்வதும் பிரசுரம் செய்வதும் குற்றமாகாது.

(2) உத்தியோக சம்பந்தமாய் ஒரு சர்க்கார் அதிகாரி செய்யும் காரியத்திலிருந்து தெரியவரும் அவருடைய நடத்தை அல்லது அவருடைய குணத்தைப் பற்றிய விஷயங்களை நல்லெண்ணத்துடன் வெளிப்படுத்துவது அந்த உத்தியோகஸ்தருக்கு எவ்வளவு மதிப்புக் குறைவு ஏற்படுத்தினுலும் அது குற்றமாகாது.

(3) பொது விஷயங்களில் ஒருவர் நடந்து கொள்ளும் விதத்திலிருந்து தெரிய வரும் அவருடைய நடத்தையைப் பற்றியோ, குணத்தைப்பற்றியோ நல்லெண்ணத்துடன் அபிப்பிராயம் கூறலாம். அது குற்றமாகாது.

(4) நீதி ஸ்தலங்களில் நடக்கும் நடவடிக்கைகளைப் பற்றியும் முடிவுகளைப் பற்றியும் உண்மையான சமாசாரங்களைப பிரசுரம் செய்யலாம். அதனுல் ஒருவருக்கு என்ன மானக்கேடு ஏற்பட்டாலும் அது குற்றமாகாது.

(5) ஏற்கனவே நீதிஸ்தலங்களில் முடிவடைந்த சிவில், கிரிமினல், வழக்குகளின் தாராதரங்களைப் பற்றியும் அதில் கட்சிக்காரராகவோ, அவர் ஏஜண்டாகவோ, சாட்சிகளாகவோ வந்தவர்களின் நடத்தையைப்பற்றியும் அந்த நடத்தையிலிருந்து தெரிய வரும் அவர்களின் சுபாவத்தைப் பற்றியும் நல்லெண்ணத்துடன் வெளியிடுவது அவர்களுக்கு என்ன மானக்கேடு விளைவித்தாலும் குற்றமாகாது.

(6) பொதுமக்கள் அபிப்பிராயம் கூற வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒருவர் செய்த காரியத்தைப் பற்றி நல்லெண்ணத்துடன் அபிப்பிராயம் கூறலாம். அதனுல் மதிப்புக் குறைவு ஏற்பட்டதென்று அவர் பிறகு குறை கூற முடியாது. உதாரணமாக:- ஒருவர் ஒரு புத்தகம் எழுதிப் பிரசுரம் செய்கிருர். அதன் தவறுகளையும் ஆபாசங்களையும் எடுத்துக் காட்டி வேறு ஒருவர் நல்லெண்ணத்துடன் ஒரு பிரசுரம் செய்தால் இது குற்றமன்று. ஒரு பாடகர் பொது மேடையில் பாடுகின்ருர். நல்லெண்ணத்துடன் அவருடைய குரல் சரியாக இல்லை என்று ஒருவர் சொன்னுல் அது குற்றமாகாது.

(7) சட்டப்படிக்கோ, ஒப்பந்தப் படிக்கோ, ஒருவர் பேரில் அதிகாரம் செலுத்தும் உரிமை உள்ளவர் நல்லெண்ணத்துடன் அவருடைய நடத்தை முதலியவை பற்றி கண்டித்துக் குறை சொல்லப் பாத்தியமுண்டு.

(8) எந்த விஷயங்களில் ஒருவர் பேரில் வேறு ஒருவருக்குச் சட்டப்படி அதிகாரம் செலுத்தும் உரிமை இருக்கிறதோ அந்த விஷயங்கள் சம்பந்தமாய் ஒருவர் பேரில் நல்லெண்ணத்துடன் அந்த அதிகாரமுள்ளவரிடம் குற்றம் சாட்டி, அதனுல் குற்றம் சாட்டப்பட்டவருக்கு என்ன அவமானம் விளைந்தாலும், அது குற்றமாகாது.

(9) தம்முடைய சொந்த விஷயங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவோ, வேறு ஒருவருடைய விஷயங்களைப் பாதுகாக்கவோ, அல்லது பொது நன்மைக்காகவோ நல்லெண்ணத்துடன் ஒருவருடைய குணம் அல்லது சுபாவத்தைப்பற்றிச் சொல்லவேண்டியதாக இருந்து அப்படிச் செய்வதால் யாருக்கு அவமானம் நேர்ந்தாலும் அது குற்றமாகாது.

(10) ஒருவரின் நன்மையை உத்தேசித்தோ, பொது நன்மைக்காகவோ, வேறு ஒருவரைப்பற்றி நல்லெண்ணத்துடன் எச்சரிக்கை செய்வதும் குற்றமாகாது. இதுதான் 'அவமானம் விளைவிப்பது' அல்லது அவதூறு என்ற கிரிமினல் குற்றத்தைப்பற்றிய சட்டம். குற்றம் ருசுவானால் இரண்டு வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

பிரஸ்தாப வழக்கில் மேலே சொன்ன 7, 8-ஆவது விதிவிலக்குகளைப்பற்றிய ஒரு சட்டப் பிரச்னை ஏற்பட்டது.

ஒரு கிராமத்தில், வன்னிய குலத்தைச் சேர்ந்த சிலர் அவ்வூரில் உள்ளவர்களைக் கொண்டு ஒரு பஞ்சாயத்துக் கூட்டினர். அப்பஞ்சாயத்தில் வன்னிய குலத்தைச் சேர்ந்தவர்களுடன் கூட மற்றும் அந்த ஊரில் உள்ள வேறு ஜாதிகளைச் சேர்ந்தவர்களும் பஞ்சாயத்தார்களாக இருந்தனர். இப்பஞ்சாயத்தின் முன் அவர்கள் வன்னிய குலத்தைச் சேர்ந்த அவ்வூர் ஸ்திரீ ஒருத்தி துர் நடத்தை உள்ளவள் என்று அவள் பேரில் சில அவதூறான விஷயங்களைச் சொன்னார்கள். அவை அவளுக்கு அவமானத்தை உண்டு பண்ணக்கூடிய விஷயங்கள். அவளையும் அவள் தகப்பனாரையும் ஜாதிக்கட்டுப்பாடு செய்ய வேண்டுமென்றும், தொழிலாளர்கள் அவர்களுக்கு எந்த வேலையும் செய்யக்கூடாதென்றும், உள்ளூர் கோயிலில் கூட அவர்களுக்குப் பிரசாதம் கொடுக்கக்கூடாதென்றும் கேட்டுக்கொண்டனர். பஞ்சாயத்தார்கள் என்ன செய்தார்களென்று நாம் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. இவ்விதம் புகார் செய்தவர்கள் மீது அந்த ஸ்திரீக்கு அவமானம் விளைவித்த குற்றத்திற்காகக் கிரிமினல் வழக்குத் தொடரப்பட்டு அவர்கள் மாஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப்பட்டனர்.

தண்டனை அடைந்தவர்கள் ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் மனு செய்து கொண்டனர். தங்கள் ஜாதியைச் சேர்ந்த ஒருவர் மீது பஞ்சாயத்தார் முன் நல்லெண்ணத்துடன் குற்றம் சாட்டத் தங்களுக்கு உரிமை இருக்கிறதென்றும், என்ன அவமானம் அதனால் உண்டானாலும் அது குற்றமாகாதென்றும், மேலே சொன்ன விதிவிலக்குகளுக்குள் வருமென்றும் அவர்கள் வாதாடினர்.

நீதிபதி அவர்கள் இக்கட்சியை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒவ்வொரு ஜாதிக்கும், அதைச் சேர்ந்தவர்களின் துன்மார்க்க நடத்தையைப் பற்றி விசாரித்து, அவர்கள் ஜாதியைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளும் பழக்கம் இந்நாட்டில் உண்டென்றும், அது இப்போது சட்டப்படிக்கான ஒரு உரிமையாகவே பாவிக்கப்படுமென்றும், ஒரு ஜாதியைச் சேர்ந்த ஸ்திரீயின் நடத்தையைப்பற்றி அதே ஜாதிப் பஞ்சாயத்தார்களிடம் புகார் செய்வது மட்டில்தான் சட்டத்தால் காப்பாற்றப்பட்டிருக்கிறதென்றும், அப்படிக்கல்லாமல் பல ஜாதிகளைச் சேர்ந்த பஞ்சாயத்தார்களுக்கு ஒரு குறிப்பிட்ட ஜாதியைப்பற்றி யாதொரு அதிகாரமுமில்லை என்றும் அவர்கள் முன் சொல்லப்படும் விஷயங்கள் அவதூறாகவும் அவமானம் விளைவிக்கக்கூடியதாகவும் இருந்தால், அது கிரிமினல் குற்றமாகும் என்றும் அபிப்பிராயப்பட்டு, தண்டனையை நீதிபதி அவர்கள் ஊர்ஜிதம் செய்தனர்.

## குற்றம் செய்ததாக தண்டிக்கப்பட்டவர் ஒரு சட்டப் பிரச்னையால் ஹைகோர்ட்டில் தப்பினர்

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதி; கனம் நீதிபதி பஞ்சாபகேசய்யர் அவர்கள்

ஆதாரம்: *63 லா வீக்லி 209*

நடுப்பகலில் ஒரு பொது ஸ்தலத்தில் மூன்று பேர்கள் சேர்ந்து கொண்டு மாசிலாமணி என்பவரை நையப் புடைத்தனர். அடி பட்ட மாசிலாமணி அடித்தவர்களை எதிர்க்க வில்லை. எதிர்க்க முயற்சி செய்யவுமில்லை. வலிதாங்காமல் மட்டில் அலறினான். அடித்தவர்கள் மூன்று பெயர்களும் 'கலகம்' செய்த குற்றத்திற்காக இந்தியன் பீனல் கோடு என்ற குற்றங்களைக் குறித்த

(தொடர்ச்சி 16-ம் பக்கம்)



# கேள்வியும் – பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில் தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

**கேள்வி:** (L 2541 ராமன், மதுரை) கூட்டாக வியாபாரம் செய்த இரு சகோதரர்களில் ஒருவர் இறந்துவிடுகிறார். இறந்தவருக்கு ஒரு மனைவியும், மைனர் மகனும் உண்டு. இறந்தவரின் மனைவியை ஏமாற்றி, குறைந்த ரூபாய் கொடுத்து அவளிடம் இறந்தவருடைய பாகத்தை உயிருடன் இருக்கும்சகோதரர் வாங்கிக்கொண்டால் மேஜரான பிறகு இறந்தவரின் மகன் வழக்குத் தொடர்ந்து வியாபார சாமான்களைக் கைப்பற்ற முடியுமா?

**பதில்:** கூட்டு வியாபாரம் ஆரம்பிக்கப்படும்பொழுது ஏற்படும் ஒப்பந்தத்தில் ஒரு கூட்டாளி இறந்த பிறகு மற்றவர் இறந்தவருடைய பாகத்தை என்ன விலை கொடுத்து வாங்கிக்கொள்ளலாமென்று கண்டிருந்தால் அதன்படிக்குள்ள விலையைக் கொடுத்து இறந்தவருடைய பாகத்தை வாங்கிக்கொள்ள உரிமை உண்டு. அப்படி ஒன்றும் ஷரத்து இல்லாவிட்டால் இறந்த கூட்டாளியின் பாகத்திற்கும், அத்துடன் லாபமாவது, 6% வட்டியாவது இறந்தவரின் வார்சு கேட்கலாம். வார்சின் கார்டியன் ஏமாற்றப்பட்டிருந்தால், வார்சு மேஜராகி மூன்று வருடங்களுக்குள் வழக்குத் தொடரலாம்.

**கேள்வி:** (L 2543 தேவண கவுண்டர், திப்பம்பட்டி) 1928-ல் செய்த அடமானத்திற்காக, 1934-ல் கிரயம் செய்த பூமியைத் 'திருப்புவதற்கு'ச்சட்டம் பாதிக்குமா?

**பதில்:** திருப்பச் சட்டமில்லை.

**கேள்வி:** (L 2545 சந்திரசேகரன், திருச்சேறை) கலியாணமாகி ஐந்து வருடங்களாக இரண்டு குழந்தைகளையுடைய பெண் சித்த சுவாதீன மில்லாமலிருந்தால் அப்பெண் சம்மதமில்லாமல் மறு விவாகம் செய்து கொள்ளலாமா?

**பதில்:** முடியாது. (ஆனால் பைத்தியமாக இருந்தால், முன் மாத இதழில் சொல்லப் பட்டிருக்கும் L 2501 கேள்வியின் பதிலைப்பார்க்கவும்)

**கேள்வி:** (L 2546 முத்துசாமி செட்டியார் கரூர்) சம்பள ஆட்கள் இல்லாமல் கடை வைத்து வியாபாரம் செய்பவர்கள் வாரத்திற்கு ஒரு நாள் கடை மூட வேண்டுமா? வார விடுமுறைப் போர்டு வைக்க வேண்டுமா?

**பதில்:** இரண்டும் 3-1-1951 வரை வேண்டியதில்லை. 3-1-1950 முதல் ஒரு வருடத்திற்கு இவர்களுக்கு ஷாப் சட்டமே கிடையாது (1950 பிப்ரவரி 'வக்கீல்' 24 ஆம் பக்கம் பார்க்கவும்)

**கேள்வி:** ஒரு பெண்ணைத்திருமணம் செய்து கொண்டபின் அப் பெண்ணுக்குத் தீராத வியாதி இருப்பதைக் கோர்ட்டில் நிரூபித்தபின் மறு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளக் கோர்ட்டார் அனுமதிப்பார்களா ?

**பதில்:** தீராத குஷ்டரோகம், அல்லது தீராத மேக வியாதியால் மனைவி ஐந்து வருடங்களுக்குப் பீடிக்கப்பட்டிருந்தால் கோர்ட்டில் மனுப்போட்டு, புருஷன் விவாக ரத்துச் செய்து கொள்ளலாம். ஆனால் இந்த வியாதிகள் புருஷனிடமிருந்து பரவினதாக இருக்கக் கூடாது. விவாக ரத்து ஏற்பட்ட பிறகு மறு விவாகம் செய்து கொள்ள, கோர்ட்டின் அனுமதி தேவையில்லை. விவாகம் ரத்தான ஆறு மாதம் சென்று மறு விவாகம் செய்து கொள்ளலாம்.

**கேள்வி:** (L 2572 சாத்தையா, சிட்டார் கோட்டை) 1942-க்குப் பிறகு ஒரு இனாம் தார் தமது கிராமத்தில் குடியிருக்க ஒரு பங்களா கட்டியிருந்தால் அது ஜமீன் ஒழிப்புச் சட்டப்படி கவர்ன்மெண்டாரால் எடுத்துக் கொள்ளப்படுமா ?

**பதில்:** எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

**கேள்வி:** (ஷை) சம பங்குள்ள அநேக இனாம்தார்களுக்குச் சொந்தமான பண்ணை நிலங்களை மேல் பார்த்து வந்த ஒரு இனாம் தாருக்கு மட்டில் (ஜமீன்-இனாம் ஒழிப்புச் சட்டப்படி) பட்டா போட்டுக் கொடுக்கப் படுமா ? பட்டா போட்டுக் கொடுத்தால் தாவா செய்ய வழி உண்டா ?

**பதில்:** பண்ணை நிலங்களுக்குச் (Private Lands) சொந்தக்காரர்களான எல்லோரும் சேர்ந்து பட்டா அடையப் பாத்தியமுள்ளவர்கள். யாருக்குப் பட்டா கொடுப்பதென்று முதலில் செட்டில்மெண்ட் ஆபீசர் தீர்மானம் செய்வார். அவருடைய தீர்மானத்தின் பேரில் இரண்டு மாதங்களுக்குள் டிரிபுனலுக்கு அப்பீல் செய்யலாம். டிரிபுனல் செய்யும் தீர்மானம் முடிவானது. சிவில் கோர்ட்டில் தாவா செய்ய முடியாது.

---

(*14*-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தின் 160-ஆவது பிரிவின்படி குற்றம் சாட்டப்பட்டு, தென்காசி பெஞ்சு கோர்ட்டால் தண்டிக்கப் பட்டனர்.

தண்டனை அடைந்தவர்கள் மூவரும் ஹைகோர்ட்டுக்கு 'ரிவிஷன்' மனுக் கொடுத்தனர். ஹைகோர்ட்டில் அவர்களுக்காக அவர்களுடைய வக்கில் சொன்ன கக்ஷி ஏற்றுக் கொள்ளப் பட்டது. அதாவது:- 'கலகம்' என்பதற்கு, 'சண்டை' அவசியம். இதற்கு இரண்டு பெயர்களோ இரண்டு கட்சிகளோ ஒருவருக் கொருவர் எதிராகச் சண்டையிட வேண்டும். ஒருவர் அடித்ததை அடி பட்டவர் எதிர்க்காமலும் தடுக்காமலும் இருந்தால் இதில் 'சண்டை' ஏது? 'கலகம்' ஏது? வாயால் எதிர்த்துக் கூச்சலிட்டால் கூடப் போதும். இவ்வழக்கில் அது கூட இல்லை. மாசிலாமணி அடி பொறுக்காமல் அலறியதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய வில்லை. ஆகையால் மாசிலாமணியை அடித்தவர்கள் வேறு என்ன குற்றங்கள் செய்திருந்தாலும் 'கலகம்' (affray) என்ற குற்றம் செய்ய வில்லை என்ற கட்சியை நீதிபதி அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். எதிரிகள் விடுவிக்கப் பட்டனர்.

இவ்வித வழக்குகளில் மறுபடியும் சட்டப் படிக்குச் சரியான குற்றத்திற்குக் குற்றச் சாட்டுப் போட்டு நடத்தும்படி உத்தர விடலாம். இவ்வழக்கில் மாசிலாமணிக்குத் 'துன்பம்' அல்லது 'வேதனை' உண்டாக்கிய குற்றத்திற்காகவோ அவரைத் "தாக்கிய" குற்றத்திற்காகவோ பீனல் கோடு 323, 352 பிரிவுகளின்படி எதிரிகளை மறு விசாரணை செய்யவேண்டுமென்று உத்தரவிட நீதிபதி அவர்களுக்கு அதிகாரமுண்டு. ஆனால் இவ்வழக்கு ஒரு அற்ப வழக்காக (Petty Case) இருந்ததால் மறு விசாரணை அவசியமென்று நீதிபதி அவர்கள் கருதவில்லை.

கேள்வி: (L 2574 சின்னப்பன்) ஒருவர் ஒரு பெண்ணை மணம் செய்து கொள்ளாமலே அவளைத் தன் குடும்பத் தலைவியாக்கி, அவளுடன் குடும்ப வாழ்க்கை நடத்தி வந்தால் அவர் மறுபடியும் வேறு ஒரு பெண்ணையும் இவ்விதமே செய்ய இரு தாரத்தடைச் சட்டம், இடம் கொடுக்குமா?

பதில்: பலதாரத் தடைச்சட்டம் என்பது மணம் அல்லது விவாகம் செய்து கொள்ளும் விஷயத்தை மட்டில் தான் ஒழுங்கு படுத்துகின்றது. மணம் செய்து கொள்ளும் பெண்ணுக்குத்தான் சட்டத்தில் 'மனைவி' அல்லது 'தாரம்' என்று பெயர். தங்கள் கேள்வியிலிருக்கும் இரண்டு பெண்களுக்கும் 'மனைவி' அல்லது 'தாரம்' என்ற அந்தஸ்து இல்லை. இவ் விஷயங்களை ஒழுங்கு செய்ய வேறு எந்தச் சட்டங்கள் இருந்தாலும், இருதாரத் தடை சட்டம் இவ்விஷயத்தில் தலையிடவில்லை.

கேள்வி: (L 2388 ஷாஹுல் ஹமீது, கோடிக்கரை) ஒரு முஸ்லீம் இறக்கும் போது அவருடைய மனைவி, இரண்டு ஆண், ஐந்து பெண்களையும் விட்டு விட்டு இறந்து போனார். அவர் சொத்தின் பொறுமானம் ரூ 30,000. அவர் இறக்கும் முன்பே மூன்று பெண்களுக்குக் கலியாணமாகி விட்டது. இறந்தபின் ஒரு மகளுக்குக் கலியாணமாகி இருக்கிறது. தகப்பன் இறந்த பிறகு கலியாணம் ஆன பெண்ணுக்கு என்ன பாகம் கிடைக்கும்?

பதில்: தகப்பன் இறந்தவுடன் மனைவிக்கு 8ல் 1 பங்கு போக, பாக்கியை 9 பங்காகச் செய்து ஒவ்வொரு பெண்ணுக்கும் 1 பங்கும் ஒவ்வொரு ஆணுக்கும் 2 பங்கும் உண்டு. பாகஸ்தர்கள் எல்லோரும் சம்மதித்தால், தகப்பன் இறந்த பிறகு நடக்கும் கலியாணங்களுக்கும் (அது வரை பாகம் பிரிபடாதிருந்தால்) பொது சொத்தில் செலவு செய்யலாம். சம்மதமில்லா விட்டால் அவ்விதம் பொதுச் சொத்தில் செலவு செய்வது செல்லாது. சொத்தில் பாகமடைவதில் தகப்பன் இறக்கும் முன் கலியாணமான பெண்ணுக்கும், பிறகு கலியாணமான பெண்ணுக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லை.

கேள்வி: (L 2596 உடையப்பன், கீழப்பூங்குடி) ஒரு ரயத்து புஞ்சை நிலங்களை ஒத்தி வைத்து 100 வருடங்களிருக்கலாம். புதிய ஒத்திச் சட்டப்படி சொத்து சுவான்தாருக்குச் சேருமா? ஒத்தி வாங்கியவருக்குச் சேருமா?

பதில்: ஒத்தியை மீட்கும் பாத்தியம் காலாவதி சட்டத்தால் பாதிக்கப்படாமலிருந்தால் மீட்கலாம். ஒத்தியை மீட்கும் பாத்தியம் ஏற்பட்டு 60 வருடங்களுக்கு மேலானால் காலாவதி சட்டத்தால் பாதிக்கப்பட்டு, சொத்து, ஒத்தி வாங்கியவரைச் சேர்ந்து விடும்.

கேள்வி: (L 2599 பாண்டுரேங்கன், திருவண்ணாமலை) கணவன் சண்டையின் பேரில் வீட்டை விட்டுப் போய் மூன்று ஆண்டுகள் ஆயின. அவர் எங்கிருக்கிறார் என்ன செய்கிறார் என்று தெரிய வில்லை. இந்நிலைமையில் மனைவி மறு விவாகம் செய்து கொள்ள விவாக ரத்து அவசியமா? அல்லது விளம்பரம் செய்து விட்டுச் செய்து கொள்ளலாமா? விவாக ரத்துச் செய்துகொள்ள கணவன் மனைவி இருவரும் ஒன்று கூடிச் செய்து கொள்ள வேண்டுமா?

பதில்: காரணமில்லாமல் மனைவியை அனாதரவு செய்து புருஷன் விட்டு விட்டுப் போய் மூன்று வருடங்களானால் விவாக ரத்துக்கோரி மனைவி மனுப் போடலாம். விவாகரத்து கோர்ட் மூலம் ஏற்பட்டால் தான் மனைவி மறு விவாகம் செய்து கொள்ளலாம். விளம்பரம் செய்வது உபயோகமில்லை. விவாக ரத்துக்குக் கணவனும் மனைவியும் ஒன்று கூடிச் செய்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

கேள்வி: (L 2608 கிருஷ்ணன், காட்டுப்புத்தூர்) ஒருவர் குறைந்த வட்டிக்குப் பாண்டில் கைஒப்பம் வாங்கிக் கொண்டு திருட்டுத்தனமாக அதிகவட்டிவாங்குகிறார். அவருக்கு லைசென்சு இல்லை. என்ன வழி?

**பதில்:** பணம் கடன் கொடுத்தவர் ஈடு வாங்கிக் கடன் கொடுப்பவராக இருந்தால் தான் லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும். இல்லா விட்டால் லைசென்சு வேண்டியதில்லை. ஈடு சம்பந்தமில்லாவிட்டால் அதிக வட்டியை திருட்டுத்தனமாகக் கொடுக்காமலிருப்பது தான் வழி.

**கேள்வி:** (L 2620 ரத்தினம், உடுமலைப்பேட்டை) குடியானவர்கள் விற்பனை செய்யும் வெல்லத்துக்கு விற்பனை வரி உண்டா? நெல், சோளம், மற்றத் தானியங்களை விற்றால் வரி உண்டா?

**பதில்:** தமக்கு ஏதாவது பாத்தியமுள்ள நிலங்களில் விளையும் நெல், சோளம் மற்ற தானியங்களை யார் விற்றாலும் விற்பனை வரி கிடையாது. வெல்லத்தை விற்கும் குடியானவர் 'வியாபாரியாக'வும் இருந்து, வெல்லம் விற்றால் விற்பனைவரிச் சட்டப்படி விற்பனை வரி உண்டு.

**கேள்வி:** (L 2621 ராஜகோபாலய்யங்கார், மணப்பாறை) நஞ்சை, புஞ்சை நிலம் குத்தகை முதலிய ஒன்றுமில்லாத தொழில் வரி, வீட்டு வரி மட்டில் கொடுக்கக் கூடியவருக்கு விவசாயி கடன் நிவாரணச் சட்டத்திருத்தப்படி வட்டி பரிகாரம் கிடைக்குமா?

**பதில்:** கிடைக்காது. தொழில்வரி அல்லது வீட்டுவரி அதிகமாய்க் கட்டும் காரணத்தினால் மட்டில் ஒருவர் இச்சட்டப்படி 'விவசாயி' அல்ல என்று இருந்தால் தான் அவருக்கு வட்டிப் பரிகாரம் உண்டு.

**கேள்வி:** (L 2627 முகமது மைதீன், சிவகாசி) டிரேட் மார்க் ரிஜிஸ்டர் எங்கே செய்வது? யார் மூலம் ரிஜிஸ்டர் செய்வது?

**பதில்:** "Registrar of Trade Marks, Bombay" (ரெஜிஸ்ட்ரார் ஆப் டிரேட் மார்க்ஸ், பம்பாய்) என்ற அதிகாரிக்கு மனுப்போட்டு டிரேட் மார்க்கைப் பதிவு செய்து கொள்ளலாம். நேரில் மனுப் போடலாம். இல்லாவிடில் வக்கீல்கள் மூலமாகவாவது, இதற்காகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் ஏஜண்டுகள் மூலமாகவாவது, மனுப்போடலாம் (செக்ஷன் 80 டிரேட் மார்க்ஸ் ஆக்ட்-1940)

**கேள்வி:** (L 2629 அப்துல் காதர், நெல்லை) ஒரு வியாபாரி சரக்குகளை ரூ 1000 கிரயம் பேசி, அத்துடன் விற்பனைவரி ரூ 15-10-0 அதற்கு வரி 0-4-0 ஆக ரூ 15-14-0 சேர்த்து வசூல் செய்வது விற்பனை/வரிச்சட்டப்படி சரியா?

**பதில்:** சாமான் வாங்குபவரிடம் விற்பனை வரிக்கு மறுபடியும் வரி வசூல் செய்வது தவறு. ஆனால் ஒரு வியாபாரி தவறாக அதிகப்படியான தொகையை மேற்கண்ட விதம் வசூல் செய்திருந்தாலும் அதையும் சர்க்காருக்குச் செலுத்திவிட வேண்டும். தாம் அதை எடுத்துக் கொள்ளக் கூடாது.

**கேள்வி:** (L 2640 குப்புசாமி, காங்கயம்) ஒத்தித் தொகையில் தள்ளுபடி என்ற சட்டம் எப்பொழுது அமுலுக்கு வந்தது? அத் தேதிக்குப்பின் எழுதிய ஒத்திகளுக்கும் அச்சட்டம் உண்டா?

**பதில்:** சட்டம் அமுலுக்கு வந்தது 25-1-1949. ஆனால் 30-9-1947க்கு முன் ஏற்பட்ட ஒத்திகளுக்குத்தான் இத் திருத்தச் சட்டம்; அதற்குப்பின் ஏற்பட்ட ஒத்திகளுக்கு இல்லை.

**கேள்வி:** (L 2641 ராமசாமி நாயக்கர், கரூர்) ஒரு விவசாயி முதலில் ஒரு ஒத்தி வைத்து அதன் கெடு முடிவதற்குள், அதே சொத்தின் பேரில் இன்னும் அதிகத் தொகை (கடன்) வாங்கி இரண்டாவது ஒத்திப் பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறார். இரண்டாவது ஒத்தியின் கெடு இன்னும் அதிகமாக இருந்தால் அது செல்லுமா?

**பதில்:** 30-9-1947க்கு முன் இவை இரண்டும் ஏற்பட்டிருந்தால், யாதொரு கெடு நிபந்தனையுமில்லாமல் சொத்தை மீட்க முடியும்.

# பத்திரங்கள் - ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணம் உள்பட

*["வக்கீல்" 1949 அக்டோபர் இதழில் கிரயம்; நவம்பர் இதழில் அடமானம்; டிசம்பர் இதழில் குத்தகை-வாடகை; 1950 ஜனவரி இதழில் 'செட்டில்மெண்ட்' பிப்ரவரி இதழில் 'டிரஸ்ட்டு'; மார்ச்சு இதழில் இனும் சாசனங்கள்-இவைகளைப் பற்றியும் அவைகளுக்குரிய ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணங்களையும் விபரமாய் எழுதியுள்ளோம்.]*

## பரிவர்த்தனை

'விற்பனை' என்பது ஒரு சொத்தை வேறு ஒருவருக்கு கொடுத்து அதற்குப் பதிலாக பணத்தைப் பெற்றுக் கொள்வது. சொத்தைக் கொடுப்பவர் அதற்கு பதிலாக வேறு சொத்தையோ, சாமானையோ பெற்றுக் கொள்வது தான் 'பரிவர்த்தனை'. ஒரு சொத்தைக் கொடுத்து அதற்கு பதிலாக வேறு சொத்தும் பணமும் சேர்ந்து பெற்றுக் கொள்வதும் பரிவர்த்தனைதான். பரிவர்த்தனையில் இரு திறப்பாருடைய சொத்து பாத்தியங்களும் மாற்றப்படுகிறது. ஒருவர் தன்னுடைய சொத்தை வேறு ஒருவருக்கு மாற்றுகிறார். அதை அடைபவர் தம்முடைய சொத்தை முதல் நபருக்கு மாற்றுகிறார். இரண்டு மாற்றல்களும் ஒரே பத்திரத்தின் மூலம் ஏற்படுவதுதான் பரிவர்த்தனை.

உதாரணம் (1): ஒருவர் தமக்குச் சொந்தமான ஒரு ஏகர் சாகுபடி நிலங்களை வேறு ஒருவருக்குக் கொடுத்து அதற்கு பிரதிப் பிரயோஜனமாக ரூபாய் 1000 மட்டில் பெற்றுக் கொள்கிறார். இது கிரயம் அல்லது விற்பனை எனப்படும்.

உதாரணம் (2): ஒருவர் தமக்குச் சொந்தமான ஒரு ஏகர் சாகுபடி நிலங்களை வேறு ஒருவருக்குக் கொடுத்து அதற்கு பிரதிப்பிரயோஜனமாக அவரிடம் ஒரு வீட்டை பெற்றுக் கொள்கிறார். இது பரிவர்த்தனை அல்லது சொத்து மாற்றல்

உதாரணம்: (3) ஒருவர் தமக்குச் சொந்தமான ஒரு ஏகர் சாகுபடி நிலங்களை வேறு ஒருவருக்குக் கொடுத்து அதற்குப் பதிலாக ஒரு வீட்டையும் ரூபாய் 300ம் பெற்றுக் கொள்கிறார். இதுவும் பரிவர்த்தனைதான். (பணம் மட்டில் பெற்றுக் கொள்வது தான் கிரயம். பணத்துடன் வேறு சொத்து சேர்ந்து பெற்றுக் கொண்டால் பரிவர்த்தனை ஆகிவிடும்)

### பத்திரம் வேண்டுமா

பரிவர்த்தனை என்பது கிரயசாசனங்களைப் போலவே. ரூ 100-க்குட்பட்ட மதிப்புள்ள சொத்துக்களை யாதொரு பத்திரங்களுமில்லாமல் ஒருவருக் கொருவர் மாற்றிக் கொள்ளலாம். அதாவது இவ்வித சொத்தின் சுவாதீனம் உடனே கொடுக்கப்படுவதின் மூலம் பரிவர்த்தனை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால் ரூ 100 அல்லது அதற்குமேல் மதிப்புள்ள சொத்துக்களையும், சுவாதீனம் கொடுக்கப்பட முடியாமலிருக்கும் சொத்து பாத்தியங்களையும், பரிவர்த்தனை செய்து கொள்ள வேண்டுமானால் சரியான ஸ்டாம்பில் பத்திரம் எழுதி அதை ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் செல்லாது.

ஸ்டாம்பு:- மாற்றப்படும் சொத்துக்களில் யார் கொடுக்கும் சொத்து அதிக மதிப்பு உள்ளதோ அந்த மதிப்புக்குக்கிரய சாசனத்தைப் போல் ஸ்டாம்பு வேண்டும். இரண்டு சொத்துக்களும் சம மதிப்புள்ளவையாக இருந்தால் ஒரு சொத்தின் மதிப்புக்கு இவ்விதம் ஸ்டாம்பு வேண்டும். ஸ்டாம்பு விபரம் கீழே பார்க்கவும்.

[சர் சார்ஜ் :- ஸ்டாம்பு தவிர கிரயப் பத்திரங்களுக்கும், ஒத்தி, தானம் இவைகளுக்கும் சர்சார்ஜ என்ற அதிக கட்டணம் உண்டு. 'பரிவர்த்தனை'க்கு சர்சார்ஜ இல்லை. ஆகையால் ஸ்டாம்பை ஏமாற்றும் எண்ணத்துடன் வேணுமென்று கிரயப் பத்திரங்களை எழுதுவதில் கிரயத் தொகையுடன் ஒரு சின்ன சொத்தையும் தருவைக்குச்சேர்த்து 'பரிவர்த்தனை' என்று எழுதி பலர் சர்சார்ஜ் ஸ்டாம்பை ஏமாற்றி வந்ததால், 'பரிவர்த்தனை'க்கும் சர்சார்ஜ விதிக்க ஒரு மசோதா சென்னை சர்க்காரால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 14-3-1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் 4-A பக்கம் 121 பார்க்கவும்]

ஸ்டாம்பு ஆக்ட் 27 வது செக்ஷன் படி மாற்றப்படும் ஒவ்வொரு சொத்தின் உண்மையான மதிப்பும் சொல்லப்படவேண்டும். ஸ்டாம்பு செலவை இருவரும் ஆளுக்குப் பாதியாக ஒத்துக் கொள்ளவேண்டும்.

## ஸ்டாம்பு கட்டணம்

பரிவர்த்தனைப் பத்திரத்தில் கண்ட சொத்துகளில் எவரால் அதிக மதிப்புள்ள சொத்து கொடுக்கப்படுகிறதோ அதன் மதிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரூ. 50-க்கு மேற்படாமலிருந்தால் | | | | | 1—8—0 |
| ரூ. 50-க்கு மேல் ரூ. 100-க்கு மேற்படாமலிருந்தால் | | | | | 3—0—0 |
| ரூ. 100 | ,, | ரூ. 200 | ,, | | 6—0—0 |
| ரூ. 200 | ,, | ரூ. 300 | ,, | | 9—0—0 |
| ரூ. 300 | ,, | ரூ. 400 | ,, | | 12—0—0 |
| ரூ. 400 | ,, | ரூ. 500 | ,, | | 15—0—0 |
| ரூ. 500 | ,, | ரூ. 600 | ,, | | 18—0—0 |
| ரூ. 600 | ,, | ரூ. 700 | ,, | | 21—0—0 |
| ரூ. 700 | ,, | ரூ. 800 | ,, | | 24—0—0 |
| ரூ. 800 | ,, | ரூ. 900 | ,, | | 27—0—0 |
| ரூ. 900 | ,, | ரூ. 1000 | ,, | | 30—0—0 |

ரூ. 1000-க்கு மேற்பட்ட ஒவ்வொரு 500-க்கும், அதன் பாகத்திற்கும் அதிகபடியாக ரூ. 15—0—0

## ரிஜிஸ்டர் கட்டணம்

அதிக மதிப்புள்ள சொத்தின் பேரில் அடியில் கண்ட விகிதப்படி ரிஜிஸ்டர் கட்டணம்.

| தொகை | | | | ரிஜிஸ்டர் கட்டணம் |
|---|---|---|---|---|
| ரூ. 1 | முதல் | ரூ. 10 | உள்பட | 0—6—0 |
| ரூ. 10-க்கு மேல் | | ரூ. 25 | ,, | 0—9—0 |
| ரூ. 25 | ,, | ரூ. 50 | ,, | 0-12—0 |
| ரூ. 50 | ,, | ரூ. 75 | ,, | 1—2—0 |
| ரூ. 75 | ,, | ரூ. 100 | ,, | 1—8—0 |
| ரூ. 100 | ,, | ரூ. 200 | ,, | 2—4—0 |
| ரூ. 200 | ,, | ரூ. 300 | ,, | 3—0—0 |
| ரூ. 300 | ,, | ரூ. 400 | ,, | 3-12—0 |
| ரூ. 400 | ,, | ரூ. 500 | ,, | 4—8—0 |
| ரூ. 500 | ,, | ரூ. 600 | ,, | 5—4—0 |
| ரூ. 600 | ,, | ரூ. 750 | ,, | 6—0—0 |
| ரூ. 750 | ,, | ரூ. 1000 | ,, | 7—8—0 |
| ரூ. 1000 | ,, | ரூ. 1500 | ,, | 9—0—0 |
| ரூ. 1500 | ,, | ரூ. 2000 | ,, | 10—8—0 |
| ரூ. 2000 | ,, | ரூ. 2500 | ,, | 12—0—0 |
| ரூ. 2500 | ,, | ரூ. 3000 | ,, | 14—0—0 |
| ரூ. 3000 | ,, | ரூ. 3500 | ,, | 16—0—0 |
| ரூ. 3500 | ,, | ரூ. 4000 | ,, | 18—0—0 |
| ரூ. 4000 | ,, | ரூ. 5000 | ,, | 20—0—0 |

ரூ. 5000-க்கு மேல் இருந்தால் ரூ. 5000-க்குள்ள ரூ. 20—0—0-ம், மேற்கொண்டிருக்கும் ஒவ்வொரு ரூ. 1000-க்கும் ரூ. 4—0—0 வீதமும் ரிஜிஸ்டர் கட்டணம் கட்டவேண்டும்.

இதைத் தவிர ரிஜிஸ்டர் செய்யவேண்டிய எவ்விதப் பத்திரமும் 800 வார்த்தைகளுக்கு மேல் அடங்கியதாக இருந்தால், முதல் 800 வார்த்தைகளுக்கு யாதொரு எழுத்துக் கட்டணமும் இல்லை. அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு 175 வார்த்தைகளுக்கும் அணா 4 வீதம் எழுத்துக் கட்டணம் கொடுக்க வேண்டும். மொத்த எழுத்துக்கள் எவ்வளவு என்று ரிஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் செய்யும் மதிப்புப் போதுமானது.

# வருமான வரி

( K. S. செம்பகேசய்யங்கார் B. A., B. L. அட்வகேட், மதராஸ். )

[''வக்கீல்'' 1950 மார்ச்சு மாத இதழில் வருமான வரி என்பது என்ன; வருமானத்திற்கும் முதலுக்கும் வித்தியாசமென்ன ; முதல் இல்லாமலே வரும் வருமானத்திற்கும் வருமான வரி உண்டா; வருமானம் என்பது எவ்வளவு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது; வருமானம் எங்கே ஏற்பட்டால் வரி போடலாம்; என்ற விஷயங்கள் சொல்லப்பட்டது]

## அயல் நாட்டில் வசிப்பவரின் வருமானத்திற்கு வரி

வருமான வரிச்சட்டத்தின் 42 வது பிரிவில் இந்திய வாசி அல்லாதவருக்கு வரி போடுவதைப் பற்றிய விஷயங்கள் சொல்லப்படுகிறது. இந்திய வாசி அல்லாதவரும், இந்தியாவில் தொழில் அல்லது வியாபாரம் நடத்தி வருமானம் சம்பாதித்தால், அப்படிப்பட்ட வியாபார சம்பாத்தியத்திற்கு வரி போட அதிகாரம் இந்தப் பிரிவினுல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் இந்தியாவில் வியாபார சம்பாத்தியமுள்ள அயல் நாட்டுவாசிக்காவது அல்லது இந்தியாவிலிருக்கும் அவருடைய ஏஜண்டுக்காவது வரி போடலாம். அயல் தேச வியாபாரி (கம்பெனி முதலியவைகள் உள்பட) செலுத்த வேண்டிய வரியை, ஏஜண்ட் பிடித்து வைத்துக் கொள்ள அதிகாரமுண்டு. அயல் நாட்டிலிருக்கும் முதலாளி அதற்கு கட்டுப்பட்டவர். இந்திய வாசியுடன் சேர்ந்து அயல் நாட்டில் வசிப்பவர் வியாபாரம் செய்தால் அந்த வியாபாரத்திலிருந்து ஏற்படும் வருமானத்திற்கு வரி போடப்படும். அந்த வருமானம் இந்திய வாசிக்கே வர வேண்டுமென்ற அவசியமில்லை. வியாபாரம் தவிர, வியாபார சம்பந்தமும் இப்பிரிவில் காணப்பட்டிருக்கிறது. உதாரணமாக: இந்தியாவில் ஒரு கிளை ஸ்தாபனம் (பிராஞ்சு ஆபீஸ்) அல்லது ஏஜண்டு இருந்து, சாமான்கள் வாங்கி ஏற்றுமதி செய்யலாம்; அல்லது இந்திய வாசி அல்லாதவருக்கு இந்தியாவில் சொத்துக்கள் இருந்து அதிலிருந்து வருமானம் வரலாம்; அல்லது வெளியூர் பணத்தை இந்தியாவில் நாணயம் கொடுத்து வட்டி சம்பாதிக்கலாம். இவை எல்லாம் 'வியாபார சம்பந்தமான' விஷயங்களே. இவைகளில் ஏற்படும் வருமானத்திற்கும் வரி உண்டு, அன்னிய நாட்டில் வசிப்பவரின் இந்திய ஏஜண்டு யார்; அதை எப்படி நிர்ணயிப்பது என்பதைப் பற்றி வருமான வரிச் சட்டத்தின் 43 வது பிரிவில் சொல்லப்படுகிறது. அன்னிய நாட்டு வாசியிடம் வேலை பார்க்கும் எவரையும், அல்லது யார் மூலம் அன்னிய நாட்டில் வசிப்பவருக்கு வருமானம் அனுப்பப் படுகிறதோ அவரையும், வருமான வரி அதிகாரி இச் சட்டத்திற்காக 'ஏஜண்டாக' பாவித்து அவருக்கு நோட்டீஸ் அனுப்பி அவர் பேரிலேயே வரியும் போடலாம். ஏஜண்டின் கைக்கே வருமானம் ,வரவேண்டுமென்ற நிர்பந்தம் இல்லை. பொதுச் சட்டப்படி ஏஜண்டாக இல்லா விட்டாலும் வருமான வரிச் சட்டத்திற்காக மேற்கண்ட எவரையும் 'ஏஜண்ட்' என்று பாவிக்க அதிகாரமுண்டு.

( தொடரும் )

# கண்ட்ரோல் - லைசென்ஸ் - ரேஷன் - விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள்

## உணவு தானியங்கள்

### போக்கு வரத்துக் கட்டுப்பாடு உத்தரவு திருத்தம்

சென்னை 1947 ஆம் வருடத்திய உணவு தானியங்களின் போக்கு வரத்திக் கட்டுப்பாடு உத்தரவு என்பது உணவு தானியங்களை (அதாவது நெல், அரிசி, கோதுமை, சோளம், கம்பு, ராகி, சாமை, கொண்டைக் கடலை, கொள், துவரை, பயறு, உளுந்து, பார்லி, மக்காச்சோளம், ரை) இவைகளை, சென்னை மாகாணத்திலிருந்து வெளியிடங்களுக்குக் கொண்டு போக வேண்டுமானால் சிவில் சப்ளைஸ் கமிஷனருடைய அனுமதிச் சீட்டு (பர்மிட்) வேண்டுமென்று இருந்தது. இப்பொழுது வெளி இடங்களிலிருந்து சென்னை ராஜ்யத்திற்குள் (மாகாணத்திற்குள்) இவைகளைக் கொண்டு வரவும் அதே விதம் அனுமதிச் சீட்டு (பர்மிட்) வேண்டுமென்று திருத்தப் பட்டிருக்கிறது.

*(28—2—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 25)*

### கலப்புக் கேட்டைத் தடுக்கும் சட்ட விதிகள் திருத்தம்.

**எண்ணெய், வனஸ்பதி, பட்டாணி, கொண்டக் கடலை, துவரம் பருப்பு.**

சென்னை 1918 ஆம் வருடத்திய 3 ஆவது சட்டம் என்பது ஒரு சாமானுடன் இன்னும் மலிவான சாமான்களைச் சேர்த்து அதைக் கொடுத்து விற்பனை செய்வதைத் தடுக்கும் சட்டம். (Prevention of Adulteration Act) இதன்படி ஏறகனவே பல விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்பொழுது கீழ் கண்ட இரண்டு விதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:

விதி 28 C: விற்பனை செய்ய வேண்டிய எவ்வித எண்ணெய், கொழுப்பு அல்லது வனஸ்பதி போன்ற சாமான்களுடன், அவைகளுக்கு நிறம் கொடுக்க (கலர்) எவ்வித பொருள்களையும் கலக்கக் கூடாது. அவ்விதம் கலர் ஏற்றிய பொருள்களை ஒருவரும் வியாபாரத்திற்காக வைத்திருக்கவும் கூடாது, விற்கவும் கூடாது; விற்பனைக்காக வெளியில் தெரியும்படி வைத்திருக்கவும் கூடாது. இவ்விதம் தாமும் செய்யக் கூடாது; ஏஜண்டு அல்லது சிப்பந்தி மூலமும் செய்விக்கவும் கூடாது. (இதில் வெண்ணெய் சேர்ந்ததல்ல. அதைப்பற்றிப் பழைய விதிகளிலேயே சொல்லப் பட்டு இருக்கிறது.)

விதி 28 D: கீழ்கண்ட தானியங்களுக்கும் நிறம் உண்டாக்குவதற்காக எதையும் சேர்க்கக் கூடாது. அதாவது (1) கொண்டைக் கடலை (2) துவரம் பருப்பு (3) லெண்டில் (4) பட்டாணிக் கடலை. இவ்விதம் கலர் ஏற்றப்பட்ட மேற்கண்ட சாமான்களையும் எவரும் வியாபாரத்திற்காக வைத்திருப்பதும், விற்பதும், விற்பனைக்காக வெளியில் தெரியும்படி வைத்திருப்பதும் கூடாது. சிப்பந்தி அல்லது ஏஜண்ட் மூலமும் இவ்விதம் செய்விக்கவும் கூடாது. (இவ்விதிகளை மீறுவது குற்றமாகும்.)

*(7—3—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I A ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 21)*

### வெல்லம் போக்குவரத்து கட்டுப்பாடு உத்தரவு (1950)

சென்னை ராஜ்யத்திலிருந்து வெல்லம், நாட்டுச் சர்க்கரை முதலிய வெல்ல சம்பந்தமான சாமான்களை, சென்னை ராஜ்யத்திற்கு வெளியே உள்ள இடங்களுக்கு ரயில் மார்க்கமாகக் கொண்டு போக, சிவில் சப்ளைஸ் கமிஷனரிடம் அனுமதிச் சீட்டு (பர்மிட்) வாங்கிக் கொள்ள வேண்டும். பர்மிட் இல்லாமல் இருந்தால் ரயில்வே அதிகாரிகள் கூட வெல்லச் சரக்கை ரயில் மூலம் அனுப்புவதற்காக வாங்கிக் கொள்ளக் கூடாது.

சென்னை ராஜ்யத்திற்குள் (மாகாணத்திற்குள்) ஓரிடமிருந்து வேறு இடத்திற்குக் கொண்டு போவதை இந்த உத்தரவு தடுக்கவில்லை. மேலும் இது பனை வெல்லத்திற்குக் கிடையாது. பர்மிட்படி சாமான் அனுப்பியதும் அல்லது பர்மிட்டில் கண்ட கெடு முடிந்ததும் விவரங்களுடன் பர்மிட்டைச் சிவில் சப்ளைஸ் கமிஷனருக்கு திருப்பி அனுப்பி விட வேண்டும். இவ்விதி மீறப்பட்டால் வெல்லம் முதலியவைகளுடன் அதை ஏற்றிச் சென்ற வண்டி, மாடு முதலியவைகளும் சாக்கு முதலியவைகளும் சர்க்காரால் பறிமுதல் செய்யப் படலாம்.

(25—2—1950 சென்னை சர்க்கார் விசேஷ கெஜட் பாகம் II பக்கம் 1)

## ரேஷன் உத்தரவு திருத்தம்

### சாப்பாட்டு விடுதிகளைப் பற்றி:

1947 ஆம் வருடத்திய சென்னை பங்கீடு உத்தரவில் (ரேஷனிங் ஆர்டரில்) ஒரு புது விதி 12-A என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன்படி ஹோட்டல் முதலிய சாப்பாட்டு விடுதிகளை, அங்கே வந்து சாப்பிடக் கூடிய வாடிக்கைக்காரர்கள் சாப்பிடும் பொருட்டு எந்த எந்த நேரங்களில் திறந்து வைத்திருக்க வேண்டு மென்று சிவில் சப்ளைஸ் கமிஷனர் அல்லது ரேஷனிங் ஆபீசர் உத்தர விடலாம். வேறு சட்டங்கள் எவ்விதமிருந்த போதிலும் இந்த உத்தரவுப் படி ஹோட்டல் முதலிய ஸ்தாபனங்களை நடத்துபவர்கள் நடக்க வேண்டும். தொழிற் சாலைகளையும் மிருகச் சாலைகளையும் சேர்ந்த ஸ்தாபனங்களுக்கு இந்தப் புது விதி கிடையாது.

(24—1—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 15)

## நெல் மில் லைசென்சு உத்தரவு

**கணக்குகள் வைத்திருப்பது பற்றி:** நெல் மில் நடத்த லைசென்சு பெற்றவர்கள், ஜில்லா கலெக்டர் அல்லது அவரிடம் அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர்கள் அவ்வப்பொழுது பிறப்பிக்கும் உத்தரவுகளின் படி கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டும் என்று 5-A என்று ஒரு புது விதி சேர்க்கப் பட்டிருக்கிறது. இவ்வித உத்தரவுகள் பொதுவாகவும் இருக்கலாம்; குறிப்பிட்ட மில் சம்பந்தமாயும் இருக்கலாம்.

(24—1—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் 2 ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 15)

### நெல் மில் அரை கூலியைப் பற்றி

ஒவ்வொரு ஜில்லா கலெக்டருக்கும் நெல் அரைக்கும் மில்கள் வாங்க வேண்டிய அரை கூலியை நிர்ணயிக்க அதிகாரம் இருந்தது. இவ்வதிகாரம் இப்பொழுது எடுக்கப்பட்டு விட்டது.

(21—2—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 182)

## ஷாப் சட்டம்

### நெல் அரைக்கும் மில்கள்:

சென்னை ராஜ்யத்திலுள்ள மின்சார விசை உபயோகிக்கும் எல்லா ரைஸ் மில்களுக்கும் 7-3-1950 முதல் 6 மாதங்களுக்கு ஷாப் சட்டத்தின் 7 (1) செக்ஷனில் கண்ட விதி கிடையாது; அதாவது ஒவ்வொரு ஸ்தாபனமும் தினசரி எந்த மணி நேரத்திற்கு முன் திறக்கக் கூடாது; எந்த மணி நேரத்திற்குப் பின் திறந்து வைத்திருக்கக் கூடாதென்ற விதி கிடையாது. இரவு 10 மணிக்கு மேல் காலை 8 மணி வரையில் (மற்றவர்களுக்கு மின்சாரம் அதிகமாக உபயோகப்படாத காலத்தில்) ரைஸ் மில்கள் வேலை செய்ய வசதி கொடுக்கவே, இந்த விதி விலக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

(7—3—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 531)

### எலக்ட்ரிக் பவர் ஸ்டேஷன்களுக்கு:

சென்னை ராஜ்யத்திலுள்ள எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன்களைச்சேர்ந்த எல்லாப் பவர் ஸ்டேஷன்களுக்கும் இனி ஷாப் சட்டப்படி தினசரி திறந்து மூடும் நேரத்தை நிர்ணயிக்கும் விதி கிடையாது. ஷாப் சட்டத்தின் மற்ற விதிகளை அனுசரித்து

இவைகள் இஷ்டப்படி திறந்து மூடும் நேரங்களை அமைத்துக் கொள்ளலாம்.

(7—3—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 531)

### தொழிற்சாலைகளில் வேலை செய்யும் சிப்பந்திகள் :

1948 ஆம் வருடத்திய தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகளில் எவ்விதமான வேலை செய்யும் சிப்பந்திகளுக்கும் இனி ஷாப் சட்டம் கிடையாது.

(21—2—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 387)

### புது விதி சேர்க்கப்பட்டிருக்கிறது :

ஷாப் சட்டத்தை அனுசரித்து, சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகளுடன் விதி 19 என்று ஒரு புது விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்புது விதியின் படி எந்த ஸ்தாபனங்களுக்கும் அல்லது எந்த வகை ஸ்தாபனங்களுக்கும் அல்லது எந்தத் தனி நபருக்கும் அல்லது எவ்வகைப் பட்டவர்களுக்கும் தாற்காலிகமாகவோ, சாசுவதமாகவோ, எந்த விதிகளிலிருந்தோ எல்லா விதிகளிலுமிருந்தோ விதி விலக்குச் செய்யச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அப்படிக் கொடுக்கும் விதி விலக்குகளுக்கு யுக்தமான நிபந்தனைகளும் ஏற்படுத்தலாம்.

(14—3—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 8[illegible])

தமிழ்நாடு ... நூலகம்
187686
சென்னை-600 008

## விற்பனை வரிச்சட்டம்

### ஒரு ஸி. டி. ஓ, விடமிருக்கும் அப்பீலை வேறு ஸி. டி. ஓ. க்கு மாற்றலாம் :

விற்பனை வரிச்சட்டத்தை அனுசரித்து ஏற்படுத்தப் பட்டிருக்கும் விதிகளில் 13 ஆவது விதியுடன் ஒட்டி, கீழ்கண்ட படி சேர்க்கப் பட்டிருககிறது. அதாவது :- வரி விதிக்கும் அதிகாரி அல்லது லைசென்சு கொடுக்கும் வரி அதிகாரியின் உத்திரவின் பேரில் கமர்ஸியல் டாக்ஸ் ஆபீசருக்கு அப்பீல் கொடுக்கலாம் என்று இருக்கிறது.

ஒரு கமர்ஸியல் டாக்ஸ் ஆபீசரிடம் (C. T. O. இடம்) கொடுக்கப்பட்டு நடந்து கொண்டிருக்கும் (அதாவது பெண்டிங்கில் இருக்கும்) அப்பீலை வேறு ஸி. டி. ஓ விசாரிக்கும்படி ரெவென்யூ போர்ட்டார் மாற்றலாம். மனுவின் பேரிலும் அவர்கள் மாற்றலாம்; தாங்களாகவேயும் மாற்றலாம். மாற்றுவதின் காரணம் என்ன என்று அவர்கள் உத்தரவிலேயே காண்பிக்கப்பட வேண்டும். இவ்விதம் ஏற்படும் உத்தரவை அப்பீல் செய்தவருக்கும், அவ்வுத்தரவால் பாதிக்கப்படும் மற்றவர்களுக்கும், எந்த அதிகாரி லைசென்சு கொடுக்க வேண்டியவரோ அவருக்கும், ஸி. டி. ஓ. களுக்கும் தெரியப்படுத்த வேணடும்.

(14—3—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 85)

TKT
வல்லம்
கணபதி சோப்
சலவைக்கு சிறந்தது. எங்கும் கிடைக்கும்.

Printed by DR. V. R. MURTY at the Homoeopathy Press, Banadurai, Kumbakonam. Edited and Published by R. NARASIMHAN B. A., B. L., at No. 73, Dabir West Street, Kumbakonam, for Southern Book House Ltd.

சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
அற்புத கலர்களில் கவர்ச்சி செய்யும் பார்டர்கள்
முந்திக்ள் அமைந்த எமது சொந்த கை நெசவு

# ஜரிகை
# பட்டு & நூல் சேலைகள்

வேண்டியவற்றிற்கு ஆர்டர் கொடுங்கள்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்ற

# ராணி ரெங்கய்யர்
# ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு, கும்பகோணம்.

*கிளை : 20, லெக்ஷிமிபுரம் 2-வது தெரு, மதுரை.*

Regd. No. M. 5399

# V. S. & Sons

# SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

## வி. எஸ். & ஸன்ஸ்

### பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள்:

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை
கும்பகோணம்
( Estd. 1925 )

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்,